உ

கணபதி துணை.

# வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

| தொகுதி | பிங்கள ஆடி மீ | பகுதி |
|---|---|---|
| 9. | August. 1917. | 7. |

## கல்வியும் ஒழுக்கும்.

நமது பானுவின் முந்திய ஸஞ்சிகையில் "கல்வியும் மதமும்" என்று எழுதப்பெற்ற வியாஸத்தினால், ஒவ்வொரு தேசத்துக்கல்வி முறையும் அவ்வத் தேசத்து மதக் கொள்கையுடன் போதிக்கப்பட வேண்டியனவாக இருக்கின்றனவென்பது ஒருவாறு கூறப்பெற்றது. இனி அதனை யநுசரித்தே இந்தமாத ஸஞ்சிகையில், அம்மதக்கொள்கைகளில் மாணவர் பழகவேண்டிய ஒழுக்குகளை முறையே சொல்லிவருவாம்.

பெரியோரது அபிப்பிராயமாகச் சொல்கிறோம்; கீழ்வரும் ஒழுக்குகளை அவசியம் ஒவ்வொருவரும் அநுஷ்டிக்க வேண்டுவது. இவை இந்தத்தேசத்து மதக் கொள்கைகளைப் பெருக்கியமைக்கக் கூடியனவாக இருக்கின்றன.

1. முதலில், பள்ளிக்கூடமாணவர்களின் நடத்தைகள் முற்றிலும் உபாத்தியாயரினது இயற்கையையும் நடத்தையையும் பின்பற்றக் கூடியனவாகவே இருக்கின்றன. ஆகையினால் உபாத்தியாயர்களின் நடத்தைகளைக் கவனித்துத் தேர்ந்தே அமர்த்தவேண்டும். அவர்கள் சுதேசக்கல்வியில் ஆர்வமுடையவர்களாவென்று நன்கு ஆலோசிக்கவேண்டும். அப்படியிருந்தால், அவர்கள் மாணவர்களைத் தேசமுன்னேற்றத்துக்குத் தக்கவராக்க முயல்வார்கள்.

2. கலாசாலைகூடும் காலங்கள், பூர்விக ஆசாரப்படிக் காலையிலும் மாலையிலுமே ஏற்படுத்தப்படல் வேண்டும். இந்த முறையை இப்போது ஆரம்பிக்கப்புகுந்தால், முதலில் கஷ்டமாகத்தான் தோன்றும். இப்போது அமைத்திருக்கிற படியே, 10 மணிப் பள்ளிக்

கூடமாகவே யிருந்தால், மாணவர்க்கு மிகுந்த கஷ்டமாகவே முடியும். ஏனெனில், நமது தேசம் அதியுஷ்ண தேசமாதலால், வெயிலில் கலாசாலைக்குப் போவதும் பாடந்தருவதுமான வேலை அதிகக் கஷ்டமாகவேமுடியும். தவிரவும், அந்தப் பத்துமணிக்கே பகலுணவை எடுத்துக்கொள்ளும்படி நேரிடுகிறது; இது அவர்கட்குச் சோம்பலையே தந்திடும் என்று எண்ணுகிறேன்.

3. மாணவர்களை ஸாதாரண இந்திய உடையுடன் தேகத்தைப் போர்த்துக்கொண்டுவரும்படி உத்தரவு அளிக்கவேண்டும். தற்கால மாணவர்க்கு, இங்கிலந்தினரைப்போல உடை தரித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையுண்டாயிருப்பது ஒரு ஆச்சரியமாகாது. எனினும், அவ்வுடைகள் ஏழைகளுக்கு முடியாதனவாகவும் தனிகர்களுக்கும் கஷ்டசாத்தியங்களாகவும் இருக்கின்றன.

4. ஒவ்வொரு கலாசாலையிலும் மதப்படிப்பைப் போதிக்கக் கூடிய ஒரு வகுப்பை ஏற்படுத்தி, மதக்கலகமில்லாது எல்லா மத வுண்மைகளையும் எடுத்துச் சொல்லவேண்டும். இதனால் மாணவர்கள் தமது மதக்கொள்கைகளை அறிந்துகொள்வதுடன் பிறமதக் கொள்கைகளையும் தெரிந்து மதத்வேஷம் செய்யாதபடி பழகிவருவார்கள்.

5. மாணவர்கட்கு "வீட்டுவேலை" என்று ஒன்றும் கொடுக்காமல் அவ்வேலைகளைப் பள்ளிக்கூடங்களிலேயே செய்துதரும்படியான ஒரு காலமும் ஏற்படுத்தி நல்வழித்திருத்தல்வேண்டும்.

6. தொழிற்கல்விகளைப் போதிக்கக்கூடிய பிரயத்தனங்களும் ஸாதனங்களும் ஏற்படுத்தப் பெறல் வேண்டும். இம்முறை அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. எந்தமாணவனுக்கு எந்தத் தொழிலில் ஆசையும் பழக்கமும் உண்டோ அம்மாணவனுக்கு அந்தத் தொழிலையே கற்பிக்கவேண்டும். அப்போதுதான் மனோசக்தியும் தேஹசக்தியும் ஒருபடியான பழக்கத்தை யடையும். அன்றியும் மாணவன் தனது ஓய்வு காலங்களை இத்தொழில்களிலேயே

செலவு செய்யும்படி தொழிலுக்கென்று தனியிடமும் அமைக்கப் பெறல் வேண்டும்.

7. தேஹப் பயிற்சியும் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படல் வேண்டும். இந்தப் பயிற்சியையும் நமது பூர்வீக முறையை அநுசரித்து நடத்தலே மிகவும் பிரயோஜனகரமாகும்.

8. மாணவர்களில் அறிவும் அடக்கமும் ஆற்றலும் அன்பும் கூடிய ஒருவனைச் சட்டம்பிள்ளையாக ஒவ்வொரு வகுப்பிலும் நியமித்து, அவன் வழியில் யாவரும் நடந்து வரும்படி மற்றவர்களுக்குச் சொல்லி, அப்படி நடந்து வருகிறார்களாவென்று அடிக்கடி கவனித்து வரலும் வேண்டும். அம் மாணவனும் உபாத்தியாயரிடம் அன்பும் மற்ற மாணவரிடம் அருளும் கொண்டு தான் தீயவழி செல்லாமலும் மற்றாரும் செல்லப் பார்த்திராமலும், நேருமாயின் தான் அம்மாணவனுக்குத் தக்கஉபாயங்களாற் சொல்லியோ அன்றி உபாத்தியாயரிடம் சொல்லியோ அக்கெடுமாணவனைத் திருத்த முயலவேண்டும்.

9. தான் கல்லாததை மற்றவர்க்கு யாவரும் கற்பிக்க முடியாதவராவர். ஆதலினால் உபாத்தியாயர்களும் அன்றைய அன்றைய பாடங்களை நன்கு ஆலோசித்து படித்த பின்னரே மாணவர்க்குப் போதிக்க வேண்டும். அப்போதுதான் இவரும் அநுபவித்துச் சொல்லலாம்; அவர்களும் கவனித்துக் கேட்டுப் படிக்கலாம்.

10. கூடுமானால் ஏழைகட்கும் மந்தமதிகளுக்குமென்று இராப் பாடசாலை யொன்றேற்படுத்தித் தக்க உபாத்தியாயரைக் கொண்டு போதிப்பிக்கச் செய்யலாம்.

11. பலிதமான தேசாபிமான வழிகளிலே அவர்கள் பழகி வரவேண்டிய மார்க்கங்களையுமே தேடிச் செய்வதே கடமையாக மதிக்கவேண்டும். தேசாபிமானமும் தேசக்கூட்டுறவும் மதாபிமானமும் மதத்வேஷமின்மையுமே மாணவர்க்கு உறுதிநிலையாக

கற்பிக்கவேண்டும். கலாசாலை ஒருபெரிய குடும்பமாகவும் மாணவர்கள் அக்குடும்பத்தின் அவயவிகளாகவும் இருந்து ஒற்றுமையுடன் பழகிவந்தார்களானால், பிறகு தேசக் கூட்டுறவிலே அவர் நுழையும் போது வேற்றுமையின்றியருளுடையவராகிப் பலரையும் பாதுகாக்கக்கூடிய தன்மையுடையவராகவும் மாறுவார். ஒருகுடும்பத்தில் ஸந்தோஷம் நிலைத்திருக்க வேண்டுமானால், அக்குடும்பத்திலுள்ள பலஅவயவிகளும் ஒற்றுமையுடன் உழைத்துவர வேண்டுவதுபோலவே தேசத்துக்கு அவயவிகளாகிய ஒவ்வொரு மாணவரும் தமது கலாசாலை மாணவருடன் ஒருபோதும் எக்காரணத்தைக் கொண்டேனும் கலகம் செய்யாதவராகிப் பரோபகார சிந்தையுள்ளவராகப் பழகிவந்தார்களானால், தேசப்பொது நன்மைக்குப்பாடுபடும்தொழிலில் மிகப்பழக்கமுடையவர்களாக வெளிவருவார்கள். இதுதான் தேசாபிமானமென்பதுமாகும்.

இப்படியாகப் படிப்பிக்கும் முறையே மனுமுறைமையையுயர்த்துவதற்கு ஏற்றதொரு அஸ்திவாரமாகும். கல்வியைத் தேசஉழைப்புக்குக் காரணமானதென்றே நினைத்துக் கற்பித்தல் வேண்டும். கல்வியென்பது நமது இருதயத்தில் அடங்கியுள்ள தெய்வ சக்தியை வெளிப்படுத்தக் கூடிய தூண்டுகோலாகும். அந்தத் தெய்வ சக்தி வெளிப்படுமானால் தேசத்தின் பொருட்டுத் தன்னயம் கோராமல் உலகத்துக்கு உதவிபுரிவதில் முன்னேற்றமுடையவராக இருப்பார்கள். அப்போதே தமக்கும் தமது தேசத்துக்கும் நன்றுசெய்தவர்களாவார்கள். இந்த முறையைக் கற்பிக்க வேண்டுமாயின், உபாத்தியாயரும் தமது சுகம் கருதாதவராகவும் கிடைத்தது கொண்டு திருப்தியடையவராகவும் இருந்து உழைக்க வேண்டும். இவரிடம் பழகி வெளிவந்த மாணவர்கள் "எனது தேசத்துக்கு என்னால் செய்யக்கூடியவுதவியென்ன?" என்று எண்ணக்கூடியவர்களாக இருப்பார்களேயன்றி, "நான் எப்படி பணக்காரனாகலாம்" என்று கருதக்கூடியவர்களாக இருக்கமாட்டார்கள். ஒருவன் தனது வயிற்றையே நிரப்பிக்கொள்ளும் பணக்காரனாவதினும் உலகத்தாருக்கு உபகாரஞ் செய்தலைக் கடமையாகக் கொண்ட ஏழையாக இருப்

யதே மேலானதாகுமென்று எண்ணுகிறோம். இப்படி நமது தேசம் நமது தாய்ப்பாஷை நமது புண்யமதம் நமது ஸதாசாரம் என்று அபிமானம் கொண்டு ஒழுகுவது மாணவரிடம் என்றைக்குத் தோன்றுகின்றதோ அன்றைக்கே நமது தேசமுன்னேற்றத்துக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டி விடலாம்.

ஆகையால் பெற்றோர்களே! கலாசாலை பதிபர்களே!! தலைமை யுபாத்தியாயர்களே!!! கல்வி முறையில் நமது தேசமுன்னேற்றத் துக்கு ஸாதனமான இதனைப்போன்ற இன்னும் தக்கஸாதனங்களைக் கொடுப்பீர்களென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பத்திராதிபர்.

---

## பழையனூர் நீலி.

" இன்னும் புகழ்சிறக்க வோர்பழிக் காமத் தெழுபதின்மர்
துன்னுந் தழல்புக் கொளித்ததெல் லாஞ்சுரு திப்பொருளா
யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னுரைபதிக
மன்னும் தமிழில் வருத்தநன் றேதொண்டை மண்டலமே " (8)

### பொழிப்புரை.

இக்காலத்தும் புகழ்கிற்குமாறு (தாம்நீலியென்பவட்குப்பரிந்து ஓர் செட்டிபின்பால் செய்த) ஓர் பழிக்காக வேளாளர் எழுபது பேரும் தீப்பாய்ந்திறந்தசெய்தியனைத்தையும், மதில்சூழ்ந்த "*திருவாலங்காட்டில்" திருஞானசம்பந்த நாயனார் † "திருக்கடைக்காப் புப் பதிகத்தில்" நிலைபெற்றும், தமிழிவபெய்து அவை வேதப்

---

* இது சென்னைப்பட்டணத்துக்கு மேற்கே 37 மைல் தூரமுள்ள திரு ஆலங்காடு என்னும் ரயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 3. மைல் தூரம்.

† " துஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும் வழுவிப்போய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே" (திருஞானசம்பந்தர்)

பொருளாய் விளக்கப்பெறுவதும் தொண்டை மண்டலம்.

## வரலாறு.

நீலியென்பவள், பழையனூரிலிருந்த ஒருவணிகன் மனைவி. இவள் விவாகமாகிச் சிறிது காலத்தில் அகாலமரணத்தால் இறந்து திருவாலங் காட்டிலே பேயாய்த்திரிவாளாயினாள். ஒருநாள் இவளுடைய நாயகன் காஞ்சிபுரத்திலிருந்து இக்காட்டுவழியே தனித்துச் செல்லும்போது இந்நீலிப்பேய் அவனுடைய இரண்டாம் மனைவியைப்போல வடிவங்கொண்டு ஒருகள்ளிக் கட்டையைப் பிள்ளையாக்கி இடையிலே தாங்கிக்கொண்டு அவனைத் தொடர, அவன் அவ்வடிவத்தைப் பேயெனச் சந்தேகித்து அப்பேயினது வஞ்சமொழிக்கிணங்காது ஓடினான். பேயும், "இது முறையோ! இது முறையோ!! என்னைக் காட்டில் தனியே விடுத்து அகலக்கருதினீரே" என்று அழுதுகொண்டு பின்தொடர்ந்து ‡ பழையனூரடைந்து அங்கே அம்பலத்திற் கூடியிருந்த வேளாளரிடத்திற் சென்று தன்வழக்கைச்சொல்லிற்று. அம்பலத்து வேளாளர் இருவர் வழக்கையுங்கேட்டுப் பேயைப்பார்த்து நீ கூறுவதற்கு சாக்ஷி யாதென்றுவினாவ, பேய், "இப்பிள்ளையைவிடுகின்றேன் அது அப்பாவென்றழைத்துத் தந்தை மடிமீது ஏறுதோ பாருங்கள்" என்று கூறிவிடுப்ப, அப்பிள்ளை அவ்வாறுசெய்ய வணிகன், இது பேய்க்கூத்தென்றான். அதுகேட்ட வேளாளர், இவளால்உன்னுயிர்க்குஏதேனும் இறுதி நேருமாயின் இங்குள்ள எழுபதின்மரும் உயிர்மாய்வோம். நீயும், இவளுமாக இவ்வறையினுட் போய்ச் சிறிதுநேரம் பேசி வாருங்கள் என்று சொல்ல, அப்பொழுது இருட்டிய மாலைக் காலமாதலால் வணிகன், அவர்கள் சொல்லை மறுக்க முடியாதவனாகி அறையினுட்செல்ல, பேய்தொடர்ந்து உள்ளே புகுந்து கதவடைத்து முன்பழிக்கீடாக அவனுயிரைப் பருகி மறைந்தது. வேளாளர் எழுபதின்மரும் விடிந்தபின் கதவைத்திறந்து பார்த்து மிக வருந்தித் தம்மால் இறந்த வணிகன் பொருட்டுத் தாம்கூறிய உறுதி

‡ இது திருவாலங்காட்டுக்குக் கிழக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கிறது.

மொழிப்படி அறுபத்தொன்பதின்மரும் § தீப்பாய்ந்து உயிர் துறந்தனர்.

இங்ஙனம் தீப்பாய்ந்திறந்து தங்கள்சத்தியத்தைக் காத்த வேளாளர்களது புகழை ஆசிரியர்.

" தாயினு நல்ல தலையுடை யோர்சட மதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல் லோதங்கண் மெய்முழுதுந்
தீயினும் வீழ்வார் "....... ..னைத்தமது சதகத்தின் 14-வது செய்யுளின் முற்பாதியிலும், .......................... " அங்கஞ் செந்தழலிற்
றோய்த்திட் டவருக்குச சர்வாங்க முந்திரி தூ ன்படவே
மாய்த்திட் டவர்க்கரி தோவெளி தோதொண்டை மண்டலமே "
என 16-வது செய்யுளின் பிற்பாதியிலும்,

தீப்பாய்ந் திறந்த அறுபத்தொன்பதின்மர்போக வயலுழவுக்குச் சென்றிருந்த எஞ்சிய ஒருவர், இச்செய்தி கேட்ட வப்பொழுதே உழுகின்ற கொழுவினால் குத்திக்கொண்டுயிர் விடுத்ததை

" விழுவே னெனச் சென்று வீழ்ந்தாரி லோர்மைந்தன் வேறுபட
வுழுவேலி யிற்சென் றொருநீலி முன்கை யுடையவர்க்குக்
கொழுவே படைக்கல மென்றுசொல் வாமுனங் கூறியசொல்
வழுவே யெனப்பொன்று வல்லாளனுந் தொண்டை மண்டலமே"

என இச்சதகத்தின் 37-வது செய்யுளிலும் விளக்கிச் சென்றும் உண்மை பெரிதும் பாராட்டத் தக்கன.

" இவ்வாறு வேளாளர் எழுபதின்மரும் தீப்பாய்ந்திறந்த பேரும்புகழ் அக்காலத்துத் தமிழ்மக்க ளெல்லாரையும் வியப்புறத்

---

§ " மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில்எழு பதுபேரு மூழ்கிக் கங்கை
யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளாவெனப் பேசலாமோ" (சேக்கிழார் புராணம்)

திபது போலவே சேரசோழ பாண்டியர்க்கும் அதிசய மூட்டியது. அவர்கள் மூவரும் அக்நிக்குழியை நேரிற்கண்டு மனமுருகி அவ் வேளாளர் பெருமையை ஒவ்வொரு வெண்பாவால் புகழ்வ ராயினர்.

“ தமிழ் நாவலர் சரிதையில் ” “ பழையனூரார் பழிதீர்த்த தீக் குழி அவியாதெரிய மூவ்வேந்தரும் வந்துபார்த்துப் பாடியவை ” என்னுந்தலைப்பின் கீழ் அம்மூன்று இனிய வெண்பாக்கள் காணப்படுகின்றன.

சேரன்.

“ யாவரே காராளர் யாவ ரிணையாவர்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பா லமைத்தார்க்குப் போதுமே யுண்மை
நெருப்பா லமைத்தார்க்கு நேர் ” (1)

சோழன்.

“ எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்த
தொல்லை மனுகன்சத் தோன்றிற்றே—கொல்லை
வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்தீக் கொழுந்து ” (2)

பாண்டியன்.

“ பிழைத்தாரோ காராளர் பேய்மகன்சொத் கேட்டுப்
பிழைத்தாக வெல்லர்பிழை தீர்த்தார்—பிழைத்தார்கள்
எல்லாருங் காண எரியகத்தே மூழ்கினார்
எல்லாரு மின்று முளர் ” (3)

இப்பாடல்கள், வேளாளர் சத்தியத்தைக் காத்தது பற்றி எவ்வளவு உருக்கங் காட்டுகின்றன என்பது அறிந்து மகிழத் தக்கது.

இங்ஙனம்,
சி. கு. நாராயணசாமி முதலியார்.
கோயமுத்தூர்.

# மூலரோகம்.

இந்த ரோகமானது ஆஸனவளையங்களில் கருணைக்கிழங்கின் முளைகள் போலும் முளைகள் புறப்படுங்காரணத்தால் மூலரோக மெனப்பெயர்பெற்றது.

இதற்கு வடமொழியில அர்ச்சஸ் என்று பெயர். இது ஆறு வகைப்படும், அவை:—வாதார்ச்சஸ் பித்தார்ச்சஸ் கபார்ச்சஸ் ஸந்நிபாதார்ச்சஸ் ஸமஸர்க்கார்ச்சஸ் ரக்தார்ச்சஸ் என்பனவாம்.

பொதுவாக வேறுவகையில் நான்கு விதமாகவும் கூறப்படும் அவை:—ஸஹஜார்ச்சஸ் உத்தரகாலஜார்ச்சஸ், சுஷ்கார்ச்சஸ ஆர்த்ரார்ச்சஸ் என்பன.

1. ரோகமுள்ள தாய்தந்தைகள் வழியாகப் பிறப்பது ஸஹஜார்ச்சஸ்.

2 காங்கை வஸ்துக்கள் அதாவது அதிக காரம், நன்கு பாகம் செய்யப்பெறாத ரஸபாஷாணாதி மருந்துகள் இவற்றை உட்கொள்ளுதல், நீண்டகவலை, கொரோசிந்தனை, சிறுநீரையையும் பெரிதாக மிளைக்கு, வருந்துதல, அருமை,பொறுமை ஆகிய இவற்றாலும் அதிக ஸம்போகத்தாலும் தோன்றுவதற்கு உத்தரகாலஜார்ச்சஸ் என்று பெயர்.

3. இரத்தம் சீழ் முதலியன எப்போதும் பெருகிக்கொண்டிருப்பதற்கு ஆர்த்ரமூலம் என்று பெயர்.

4. இரத்தம் சீழ் இவையில்லாமல் சுருங்கியிருப்பதற்கு சுஷ்கார்ச்சஸ் என்று பெயர்.

இந்த ரோகத்தின் செய்கைகள்:— அக்கினிமந்தம், மலபந்தம், அடித்தொடைச்சந்துகளிலும் கணுக்கால்களிலும் அதிக வேதனையை கொடுத்தல், ஆயாசம், தேகம்நாளுக்குநாள் இளைத்தல், கண் அதப்பு, மலம் சரியாகவும் தாராளமாகவும் வாராதிருத்தல், சிறுகச் சிறுகக் கடுப்போடு வெளியாகுதல் அபான வாய்வுவையுண்டாக்குதல், எப்போதும் நாபிக்குக் கீழ் இரைச்சலைத்தருதல் ஆகிய இவற்றைச் செய்யும்.

இந்த ரோகத்திற்கு மூலத்தில் வாயுதங்கி நிற்பதே காரணமாகின்றது. இது கீழ் நோக்கியிருந்தால் மலத்தைத் தாராளமாய் வெளியேற்றாமல் கடுப்பைக் கொடுப்பதும் மேல்நோக்கும்போது புளியேப்பம்,இளைப்பு,முதுகு மார்புகளில் குற்றல். எந்தக் காரியத்திலும் புத்திசெல்லாமை, சோம்பல்,தேஹத்தில் வேறு நிறமுண்டாக்கல், அயர்ச்சி, அர்ப்பலம், கோபம் இவைகளைச் செய்வதும் ஆகும்.

எந்த மூலரோகிக்கேனும் கைகால் நாபி ஆஸனம் பீசம் முகம் இவ்விடங்களில் வீக்கம் கண்டால் அது அஸாத்யம் என்று உணரப்படும்.

மூலரோகிகள் முன் எச்சரிக்கையாகவே மருந்து சாப்பிட்டுச் சவுக்கியம் செய்துகொள்ளவேண்டியது.

லேகியங்கள் சூர்ணங்கள் க்ஷூத்ரம் அதாவது ஆயுதப்பிரயோகம் க்ஷாரம் அதாவது மூலிகைகளின் உப்பு இவற்றைக்கொண்டு சிகித்ஸை செய்துகொள்ளவேண்டியது.

ஸாரங்கதர ஸம்ஹிதையில் க்ராதன் என்பவரால் சொல்லப்பட்டிருக்கிற காஸீஸாதித்தைலம் அதாவது அன்னபேதியை ஆதியாகவுடைய தைலத்தை ஆயுதப்பிரயோகமின்றியே மேல் தடவுவதனாலே குணத்துக்கு வரும்; முளைகளும் விழுந்துவிடும்.

இதற்கு முக்ய பத்தியம்:—அதிக காரம் கூடாது. வாயுவையுண்டாக்கும் ஆகாரம்கூடாது. இரத்தம் மலத்துடன் விழுந்தால் லாக்ஷாக்ருதமும் அதாவது கொம்பரக்கு நெய்யும் உபயோகப்படுத்தலாம்.

அ. சௌமிய நாராயணையங்கார்.

## உலோகவகையால் புஸ்தகங்கள்.

இப்போது காலம் இருக்கும் நிலையையறிந்து, ஒருவர் பின்வரும் விஷயத்தைச் சொல்கிறார். "இனிமேல் புஸ்தகங்கள் காகிதத்தினால் ஆக்கப்படாமல், நிக்கல் எஃகு முதலிய லோஹங்களினால் ஆக்கப்படப்போகின்றன. இதற்குக் காரணம்:—தற்போதைய யுத்

தத்தினால் உண்டாயிருக்கும் காகிதப்பஞ்சமும், ஜனப்பெருக்கினால் காடுகள் அழிக்கப்பட்டு நாடுகளாக்கப்படுவதனால் உண்டாகும் மரக்கூழ்ப்பஞ்சமும் தாம் ஆகும்.”

இதைச் சொல்கிறவர் யாரெனில், மிஸ்டர் தாமஸ் A. எடிஸன் என்பவர் ஆவார். இவர்தாம் போனோக்ராப் என்னும் அற்புதக் கருவியைக்கண்டு பிடித்தவர். இவர் இன்னும் பின் வருமாறு சொல்கிறார். “மின்ஸார ஸம்பந்தம்பெற்ற ஓர் ரஸவாத மருந்து வகையால், எஃகு தாமிரம் அல்லது நிக்கல் ஆகிய இவற்றின் தகடுகளில் அச்சுக்கு உபயோகப்படுத்தப்பெறும் மையினை (மசியை)ப் பொருந்தச்செய்யக்கூடும். இந்த மூன்று உலோஹங்களிலும் நிக்கல் என்னும் தாதுப்பொருளே காகிதம் போல் உபயோகத்துக்கு வரும் என்று எண்ணுகிறேன். இதனை, ஒரு அங்குலத்தின்(20000) இருபதினாயிரத்தில் ஒருபங்கு கனமுள்ள தகடாகச்செய்யலாம். இத்தகடு ஸாஸமாகவும் ஒடியாததாகவும் வளையக்கூடியதாகவும் உபயோகிக்கப்படலாகும்.”

“இரண்டு அங்குல கனமுள்ள ஒரு புஸ்தகமாக்கப்பட்டால் அது ஒரு பவுண்டு நிறைக்கு மேல் கனுவாக இராது.”

“நிக்கல் தகடுகள் காகிதத்தைப் போலவே மசியை உறிஞ்சக்கூடிய தன்மையுடையன. ஆனால் இதற்கு உபயோகிக்கப்பெறும் வேண்டிய மசியானது சாதாரண காகிதமசியைக் காட்டிலும் வேறு வகையான கூட்டுப்பொருள்களால் ஆக்கப்பெறல் வேண்டும். இந்த மசியை வெகு சுலபத்தில் செய்துவிடலாகும். நிக்கல் தகடுகள் எந்தவித வர்ணமைகளையும் ஏற்றுக்கொள்ளும். வழுவழுப்பான காகிதங்களில் பதிக்கப்பெறும் அழகான சித்திரங்களையும் இந்த நிக்கல் தகடுகளில் நன்றாகவும் அழகாகவும் பதிக்கலாம். ஆகக் காகிதத்தினால் செய்யக்கூடிய எவ்வகைசசாதகமும் இந்த நிக்கல் தகடுகளால் செய்து கொள்ளலாம்.”

அவரது ஔஷதசாலையில் இந்தலோஹத்தினால் செய்யப்பெற்ற காகிதம் இருக்கிறது. இதனைப்பற்றி அவர் இன்னும் சொல்லுகிறார். “இந்த விதமான நிக்கல் தகட்டில் ஐந்து சதுர அடி செய்வதற்கு

ஒன்றரை நிமிஷம் தான் ஆகிறது; ஆக ஒரு நாளில் கால் டன் நிறையுள்ள தகடுகளைச் செய்துவிடலாம். இது வியாபாரமாகிக் கூடுமானால் இதற பெருந்தொகையான தகடுகளைச் சுருட்டுவதற்குத் தக்க யந்திரமும் செய்து விடலாம்."

நிக்கல் தகடுகளைச் செய்யும் விதமும் அதை மெலித்து கப்பட்டு வருவதற்கு வழியும் சொல்லுகிறார். இது மின்சார வழியாலே செய்யப்படவேண்டுமென்கிறார். இவ்வழி எவ்வளவு சூக்ஷ்மமாகச் செய்வதற்கும் இடந்தரும் என்கிறார்.

இந்த நிக்கல் தகடுகளால் ஆக்கப்பெற்ற புஸ்தகங்களுக்கு மேல் அட்டைகளும் அந்த நிக்கல் தகடுகளாலேயே செய்யப்படலாகும் என்றும், அதன்மேல் அழகான சித்திரங்களையும் பதிப்பிக்கலாம் என்றும், காலிகோ துணி அல்லது பதனிட்ட தோல் ஆகிய இவைகளின் ஸ்தானத்துக்கும் இந்தத் தகடுகளைச் செய்து விடலாம் என்றும் அவர் சொல்கிறார்.

புஸ்தகசாலை அதிபர்கள் பின்வருமாறு முறையிடுவதும் உண்டு. "காகிதத்தினால் ஆக்கப்பட்ட புஸ்தகங்கள் சுமார் 100 வருஷங்கட்கெல்லாம் சிதறுண்டு தூள்களாகப் போகின்றன. அன்றியும் காகிதப்புஸ்தகங்கள் அடிக்கடி நெருப்புக் கிரையாகி விடுகின்றன. நீருக்கும் பயப்படுகின்றன" என்று சொல்கிறார்கள். இப்போது மிஸ்டர் எடிஸன் சொல்லுகிறமாதிரி நிக்கல் தகடுகளால் புஸ்தகம் ஆக்கப்பெற்று வெற்றிதந்து நிலைத்துநின்று பிரசாரத்துக்கும் வருமானால், நெருப்பு நீர் இவற்றுக்குப் பயமில்லையென்றே சொல்லலாம். இவைகள் நெருப்புபட்டவுடனே இளகுமானாலும் ஆறினவுடன் முன்போலவே அழிவில்லாமல் இருக்கும்.

ஒரு அங்குல கனமுள்ளதாம் இந்த லோஹத்தகடுகளில் 40,000 பக்கங்கள் கொண்டதுமான ஒரு புஸ்தகம், ஒவ்வொன்று 200 பக்கங்கள் கொண்ட 200 காகிதப்புஸ்தகங்கட்குச் சமானமாகுமென்று அவர் சொல்கிறார். இந்த 200 புஸ்தகங்களும் சேர்ந்து 9-அடி 6-அங்குலம் உயரமாகிய ஒரு குவியலாக ஆகின்றன. இந்த நிக்கல் தகட்டிலான 200 புஸ்தகங்கள் மேற்சொல்லப்பட்ட ஒரு காகிதப் புஸ்தகத்துக்குச் சமானமாகின்றன என்றும் சொல்கிறார்.

இந்தமாதிரியான சிக்கனக்கட்டுப் புஸ்தகங்களைச் செய்வதற்கே நாம் ஆதரவு காட்டி வருவோமானால், நமக்குப் பணமும் இடமும் லாபமாகும் என்பதில் யாதொரு தட்டுப்பாடும் இல்லை. இப்போதைய உலகமுன்னேற்றத்தைக் கவனித்தோமானால், இருக்க இருக்க புஸ்தகங்களாகவே குவிக்கப்பெறும் என்பது ஊர்ஜிதமாகிறது. ஆதலின், மிஸ்டர் எடிஸன் இப்போது செய்து கொண்டுவரும் பிரயத்தனம் காலத்துக்கு ஏற்றதோர் உதவியென்றே யாரும் துணிந்து சொல்லலாம். "இப்போதைய செய்வகைக்கு அந்த நிக்கல் தகட்டுக்காகிதம் ஒரு பவுண்டு நிறை 4 ஷில்லிங்காக ஆகுமானாலும் அது கைகூடி உலகத்தில் பரந்து பிரசாரமாகும்போது ஒரு பென்னியே விலையாகு" மென்றும் அவர் சொல்கிறார்.

பத்திராதிபர்.

---

## இருகடல்.

சஞ்சல உவரியிற் றுழலே நினைக்கும்
நெஞ்சே! இதுவரை நீ அடைந் திட்ட
சுகத்திலோ ரற்பம் சொல்லுதி பார்ப்பம்.
சகத்துள மாயை தனக்கடி மைத்தொழில்
பூண்டனை; அன்றிப் பொருந்திய இன்பினை
ஆண்டனை என்றே ஆகுமோ ஓர்நாள்.
என்னுறு தெண்ணி எனிடர்ப் படுவை.
புன்மை பொருந்துதி புகழ்தான் ஈதோ?
கெடுநினைப் பிதனாற் கிட்டிவந் தன்னோ
அடுப்பதே கொளில்:—அறைகுவன் கேட்டி.
நோய்க்கிட மென்றே யாரும் நுவலவும்
பாய்க்கிட மாகவும் பண்ணுவை உடலை.
பண்ணி நீ அடை பயன்தான் ஏதே?
எண்ணி எண்ணிஏங்கிட லல்லால்.
நீர்மேல் எழுத்துடல் என்பதை நினைந்து
தேர்வாய் நற்பொருள் செப்புவன் கேட்டி.
ஏக்கம் பெற்றிடும் இக்கடல் விட்டு.

மோக்ஷம் பெறநிட முதுணர் வோர்சொல்
வித்தைக் கடலிடை வீழ்ந்தனை என்னில
மெத்தவும் பயனுறும் வேண்டின் னினேய.

S. R. ஸ்ரீனிவாசமுதலியார் [ஆனைமலை.]

## ஆலங்குடி கிருஷிகர் சங்கம்.

### நெல் ஒற்றைநாற்று நடுகை.

### கும்மி.

வானமும் பூமியும் வாரிதி யினும்வாழ்
மாந்தர் முதலுயிர் காத்தளிக்கும்
தானவர் நாதனைப் பணிந்து வணங்கிநான்
சாற்றுந் தமிழைப் பொறுத்தருள்வீர் (1)
எத்தனை ஆயிர வருஷக் கணக்காக
இயற்றிய வேளாண் முறைகளெல்லாம்
இத்தின நல்முறைக் கேலாது கொஞ்சமும்
என்பதன் காரணம் யாது சொல்வீர் (2)
கூறுவேன் கேளும்நீர் தொல்முறை யில்விதை
கொள்ளைபாய்க் கொட்ட பயிர் நெருக்கி
நீருள தென்னிலும் வளராம லூசிபோல்
நின்றிடும் நாற்றின் நிலையறிவாய் (3)
நாற்றைப் பிடிப்பிடி யாகநட் டாற்பயிர்
நாடிச் செழிப்பதற் கிடைஞ்ச லுற்று
வேற்றுமை யாகவே நோயுற்று வேர்பின்னி
வெளுத்துச் சிறுத்துக் கதிர் பதியும் (4)
மாசூலும் வைக்கோலும் குறைந்து கிடைத்திடும்
மன்னர் செலவுகள் மிக அதிகம்
தேசம் புகழ்ந்திடும் புதுமுறை யைக்கொண்டால்
திண்ணமாய்ச் சாதக மெத்தவுண்டு (5)

சாதகம் மெத்த இருப்பதினால் அதைச்
சாற்றுவீர் முற்றும் எனவினவின்
போதம தாகப் புகலுகிறேனதைப்
புத்தியில் வைத்துத் தொழில் புரிவாய் (6)

சீரப்பட்ட செண்டெட்டு செழுநிலத்தில் விதை
செம்மையாய் எட்டுப் படி விதைக்க
ஏற்பட்ட சம்சாரக் கவலையில் லாதவோர்
எழில்சார் இளவல் என வளர்ந்து (7)

நீண்டு செழித்துக் கருத்துப் பெருத்ததை
நிதான மாய்ப் பறித்தோ ரேக்கர்தனில்
தாண்டியே சாணுக் கொருமுத லாய்நட்டுத்
தக்க பலனைக் கைக்கொள்ளுவீர் (8)

ஒற்றை முதலாக நட்டிட வேபயிர்
ஓங்கிக் கிளைத்து மிகச்செழித்து
பற்றி யடர்ந்துதாள் பூடுகட்டிக் கதிர்
பத்துப் பதினைந் துண்டாய் விடுமே (9)

வந்த கதிர்களில் வளரு மணிகொண்டு
மாசூலும் வைக்கோலும் குறையாமல்
நந்தலில் ராசி மிகக்கண்டு ஞாலம்
நலமடையச் செய்வீர் நண்பர்களே (10)

பாவிய வித்து லாபமுடன் நாற்றும்
பறிக்கவும் நடவும் கூலியற்பம்
தாவும் களையைப் பிடுங்கலும் நாற்றுக்கள்
நடவிலும் நல்ல லாபமாகும் (11)

நல்ல விசேஷம் கொண்ட முறையிதை
நாட்டில் எவர்களும் செய்துளரோ ?
எல்லை இலாநலம் கொண்டனரோ அதை
இயம்புகிறேன் கேளும் இன்பமதாய் (12)

சீர்பெறுந் தாலூகா ஆலங் குடியிலே
செப்பும் விவசாய இன்ஸ்பெக்டர்

பேர்பெறும் சங்கர ஐயரவர்களின்
பெருத்த முயற்சிக் கிணையிலையே (13)
கூறும்மொழி கேட்டுக் குழந்தை விராயகர்
கோட்டைப் பிரமுகமென்பவரும்
தேறியே அவ்விகாற்றை நாறு நட்டுப்பலன்
தெரிவித்த கோட்டைசைப் பார்த்திலிரோ (14)
கத்தையாய் நட்டவே ரேக்கரிலே பக்கா
கண்டதோர் எழுநூற் றைம்பதுவாம்
இத்தலம் ஒற்றை நாற்று நடவுக்கோர்
ஆயிரத் திருநூறு படியளந்தார் (15)
இன்னமுஞ் சொல்லுவேன் வீரடிப் பட்டியில்
ராமச்சந்திர னம்பலமும்
முனைக்கிப் போயொரு ஏக்கரில் முந்நூற்று
முப்பது பக்கா லாபமென்றே (16)
போட்ட விளம்பரம் பார்த்திருந்தும் இதை
பொய்யென் றுரைத்திட ஞாயமுண்டோ?
கேட்டவர் யாவரும் லாபமும கீர்த்தியும்
கிடைத்து மகிழ்ந்தார் க்ருஷிகர்களே (17)
இந்தரை மீதினில் பழைய வழக்கத்தை
என்றுமலே புது நன்முறையாய்ச்
சித்தம் மகிழ்ந்து வேளாண்மைசெய்தே
சீரும் சிறப்புமாய் வாழ்வீரே (18)
தேசம்புகழ் புதுக் கோட்டை மகாராஜா
செங்கோலரசு வளர்ந்தோங்கி
வீசுங் கதிர்மதி யுள்ளள வும்பிந்து
மேதினி தன்னில் மிகவாழ்க (19)
ஆங்கில மன்னர சோங்கப் புவி
அகில மெங்குஞ் செழித்தோங்க
பாங்குடன் வானமும் மாரி பொழிந்திட
பாக்கியம் பெற்றுக் குடிவாழ்க. (20)

ஆலங்குடி.
9—7—17. }

மீ. ச. பீருமமது.

# மரவள்ளியும் அதன் உபயோகமும்.

இது இந்த ராஜதானியில் சாதாரணத்தோட்டப் பயிராக விளைவிக்கப்படுகிறது. திருவாங்கூர் ராஜ்யத்தில் இது ஏராளமாகப் பயிராக்கப்பட்டுப் பலபேர்கட்கு உணவுப் பொருளாக உபயோகப்பட்டும் வருகிறது.

மரவள்ளி இந்தத் தேசத்துப் பொருளன்று. இது மோரிசிலிருந்து 1794 ஹுத்தில் கல்கத்தாவுக்கும் பின் இரண்டு வருஷம் கழித்து இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டது. பம்பாய்க்கும் போர்த்துகேசியர் வந்து குடியேறினபோது, அவர்களால் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகிறது. மத்தியமாகாணத்தில் இது ஸாதாரண தோட்டப்பயிராகப் பயிராக்கப்பட்டு வருகிறது. இது பினங்கிலிருந்து பர்மாவுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. அந்தமான் தீவுகளில் இது முக்கியப் பயிராகவும், விரைவில் பலந்தரும் பயிராகவும் கவனிக்கப்படுகிறது. இது இந்தியாவில் இப்போது பெரும்பாலும் எல்லாமாகாணங்களிலும் பயிராக்கப்பட்டுவருகிறது. நேபாளம், டார்ஜிலிங்கு, அஸ்ஸாம், வங்காளம், மதராஸ், திருவாங்கூர் ஆகிய இடங்களில் அதிகமாகப் பயிரிடுகிறார்கள். இதற்கு 14, 16 அங்குல மழையே போதுமானது; நன்றாய் விளையும்; ஆறு மாதத்தில் பலன் கொடுக்கும். மரவள்ளியில் பலவகைகள் இருக்கின்றன. சில சதுப்பு நிலங்களிலும் சில மேட்டுப் பாங்கான இடங்களிலும் கடல்மட்டத்திற்கு 6000 அடிக்கு உயரமான உஷ்ணபூமிகளிலும் பயிராகும். இந்தியாவுக்கு அப்புறத்தும், தென் அமெரிக்கா, கிழக்கு மேற்கு ஆபிரிக்கா, மடகாஸ்கர் முதலான இடங்களில் அதிகமாகப் பயிராகின்றது.

மரவள்ளி அதிகமாகப் பலன் கொடுக்கிற பொருள். இரண்டு வகையான கிழங்குகள் பயிர்செய்யப் படுகின்றன. ஒன்று, தித்திப்பு; மற்றொன்று கைப்பு. நமது தேசத்தில் அதிகமாகப் பயிராக்கப்பட்டு

வருவது கைப்பு வகையேதான். இவ்வகைக்கிழங்கினுள் அதிகமாக ஜலவாயு கலந்திருக்கும். திதிப்புவகைக் கிழங்கும் அவ்விதமே ஜலவாயு கலந்துள்ளதானாலும் இவ்வளவு அதிகமாக உண்டாக்கப் படுவதில்லை. இவ்விரண்டுக்கும் வித்தியாஸம் கண்டறிவது அருமைதான்; ஆனாலும் சில தாவர சாஸ்திரிகள் கண்டறிந்து கொள்வதுடன், 'இவ்வகைக் கிழங்கும் கைப்புக்கிழங்காகவே இருந்தது; பிறகு செய்வகையால் சிறிது திதிப்பு ஆக்கப்பட்டுள்ளது' என்கின்றனர். திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் அதிகமாக மதுரவகை பயிராக்கப் பட்டுவருகின்றது.

கழிகளைக் கணுக்களாகக் கத்தரித்தே பயிராக்குகிறார்கள்; முற்றின கழிகளே அழியாமல் பயிராகி வளர்கின்றன. மரவள்ளியானது தான் பயிராகிவரும் நிலத்தின் மாவுணவு சாரங்களைச் சீக்கிரம் சோஷித்து அந்நிலத்தை உரமற்ற நிலமாகச் செய்துவிடுகிறது; ரப்பர்த்தோட்டங்களில், அவற்றை விருத்தி செய்வதற்கென்றே இடையிடையே மரவள்ளிக் கழிகளையும் வைத்துப் பயிராக்குகின்றார்கள். அதனால் இதனைப் பயிர்வளர்க்கும் கிழங்கென்றும் அழைப்பதுண்டு. ரப்பர்த் தோட்டங்களில், பூமிக்கு உரம் கொடுப்பதற்காகக் கொத்தும்போது இக்கிழங்குகள் பெயர்த்தெடுக்கப் படுகின்றன. தென்னைத் தோட்டங்களிலும் தெங்குகளை வளர்க்கவேண்டி இடையிடையே மரவள்ளிகளை வைத்துப் பயிராக்குகிறார்கள். மைலாப்பூரில் சில வெற்றிலைத் தோட்டங்களிலும் அகத்தியுடன் இக்கிழங்குக் கழிகளையும் நட்டுப் பயிராக்குகிறார்கள். இப்படிப் பயிராக்கப்படுங் காலத்தில் தக்கஉரம் கொடுத்துப் பூமியைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நிலத்துக்குத் தக்கதாகவும் உரத்துக்குத் தக்கதாகவும் விளைப்போன் சிரமத்துக்குத் தக்கதாகவும் இது பலன் கொடுக்கிறது. ஒரு ஏகர் நிலத்தில் சுமார் எட்டு டன்நிறையுள்ள புதுக்கிழங்குகள் உண்டாக்கப் படுகின்றன. ஆனால் மதுரவகையைக் காட்டிலும் கைப்புவகையே அதிகப்பலன் கொடுக்கிறதாகத் தெரிகிறது. மர

வள்ளிக்குப் பகையாச்சப் பூச்சிகள் அதிகமில்லாவிடினும் காட்டுப் பன்றிகள் அதிகமாக வந்து பாழாக்குவதுண்டு. ஆகையினால் காட்டையடுத்த இடங்களிலெல்லாம், மரவள்ளித் தோட்டங்களை இராத்திரி காலத்தில் நன்றாகக் காத்துவரவேண்டும்.

தற்காலம், மரவள்ளிக்கிழங்கு அதிகமாக ஆகாரப் பொருளாக வழங்கப்பெற்று வருகிறது. சில இடங்களில் கிழங்குகளைப் பச்சையாகவே உபயோகப் படுத்துகிறார்கள். ஆனால் இப்படி உபயோகிப்பது மதுரவகையைத்தான்; என்றாலும் இவ்வகையும் ஜலவாயு சம்பந்தமான விஷத்தை உண்டுபண்ணி வியாதியைக்கொடுப்பதாக அறியப்படுகின்றது. மதுரமான உருளைக் கிழங்கைப்போல இதனையும் அவித்துத் தின்றால், யாதும் கெடுதி நேருவதில்லை யென்று தெரியவருகிறது. கிழங்குகள் தோண்டியெடுக்கப்பட்டவுடன் நன்றாய்க் கழுவப்பெற்றுப் பலவகையாகச் சமைக்கப்படுகின்றன. இதனை மாவாகவும் நொய்யாகவும் செய்து உபயோகிக்கின்றார்கள்.

மாவும் நொய்யுமாக ஆக்கப்படும்போது, கிழங்கை எடுத்துத் துண்டுகளாக்கிக் காயவைக்கிறார்கள். பிறகு வேண்டும்போது வேண்டிய அளவுக்கு மாவாக்கிக் கொள்ளுகிறார்கள். இந்த மா கோதுமை மாவுக்குப் பதிலாகச் சில இடங்களில் உபயோகப்பட்டு வருகின்றது. இதனால் ரொட்டியும் பலகாரங்களும் கூட செய்கிறார்கள். சத்தைக்கொடுத்துப் போஷிக்கும் உணவுவகைகளில் இது தாழ்ந்ததென்றாலும், ஏழைகள் தங்களது தரத்துக்குத் தகுந்தபடி இதனையே உபயோகிக்கிறார்கள். வெஸ்ட் இந்தியர்கள், புதுக் கிழங்கை எடுத்து வேகவைத்துச் சாற்றை இறுத்துக் காயவைத்து நொய்யாக்குகின்றார்கள்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில், இதை மாடு முதலானவைத்துக்கு உணவுப் பொருளாகவும் உபயோகித்து வருகிறார்கள். குதிரைகளும் பன்றிகளும் கோழிகளும் கூட இதனால் வளருகின்றன. கிழங்கில் கஞ்சிப்பசை அதிகமாக இருப்பதால், தவிட்டுடனும் பருத்தி விரையுடனும் இதனைப் பசுமுதலியவற்றுக்குக்

கொடுக்கிறார்கள்; இதனை யுணவாகக்கொண்ட பசுக்கள், மிருதியாகவும் வெளுப்பாகவும் பாலைத் தருகின்றது. இதனால் பாலாவது வெண்ணெயாவது கெடுவதாகத் தெரியவில்லை. இதனைத் துண்டு துண்டுகளாக நறுக்கியும் பருத்திவிதையுடன் கலந்துவைப்பதுண்டு. 21 பவுண்டு நிறையுள்ள பருத்திவிதையுடன் 15 பவுண்டு நிறையுள்ள கிழங்குத்துண்டுகள் சேர்ப்பதுண்டு.

மரவள்ளிக் கிழங்கினை மாவாக்கி வியாபாரம் செய்வது, பிரேஸில்; அமெரிக்கா ஐக்கியமாகாணம், மேற்கு ஆபிரிக்கா முதலான இடங்களிலே நடக்கிறது. கிழங்கு விளைவு அதிகமாகும் வரையில் மாவாக்கும் தொழில்களெல்லாம், கைகளாலே செய்யப்பட்டு வருகின்றன. மிகுதியான விளைவுக்குப் பிறகே யந்திர ஸாதனங்களைத் தேடுகின்றார்கள். உறுதியாகச் சொல்லுங்கால், உருளைக்கிழங்கு மா செய்யப்படுவது போலவே இதன் மாவும் செய்யப்பட்டு வருகிறது.

சாராயவகை செய்வதற்கும் மரவள்ளியை ஒரு முக்கியஸாதனமாகவும் கொண்டிருக்கிறார்கள். முதல் தரமான விளைச்சலில், இக்கிழங்கில் 100-க்கு 30 பாகம் கஞ்சிப்பசையும் 5 பாகம் சர்க்கரைப் பசையும் கலந்திருக்கிறது. 100-க்கு 25 வீதம் புளிப்புச்சத்து எடுக்கப்பட்ட போதிலும் சாதாரண உருளைக் கிழங்கைக் காட்டிலும் இது அதிகச்சத்துள்ளதாகக் கவனிக்கப்படுகிறது. உலர்ந்த கிழங்குகளில் 100-க்கு 80 பாகம் புளிப்புச் சத்து இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் அரிசியைப் போலவே இதுவும் சாராயம் செய்யும் வகைக்குச் சரிக்குச்சரியான பலன் கொடுப்பதாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இதனால் உண்டாக்கப்படும் சாராயவகைகளை மத்தியதரமாகவே கொண்டிருக்கிறார்கள். இது ஒருவிதமான துர்வாசனையை உடைத்தா யிருப்பதானாலும், வடிகட்டும்போது முதலிலும் கடைசியிலும் எடுக்கப்படும் தெளிவை நீக்கி விடுவதனால், இந்தத்துர்க்கந்தம் ஒருவாறு நீக்கப்படுகிறது. உருளைக்கிழங்கு முதலான இதர ஸாதனகளிலிருந்து

சாராயம் செய்வகைக்கும் இரிஸிருந்து செய்வகைக்கும் மற்று யாதொருபேதமும் இல்லை.

மற்றக் கிழங்குகளின் கஞ்சிப்பசையினால் செய்யப்பட்டுவரும் எவ்விதச் செய்பொருளுக்கும் இதுவும் உபயோகப் பட்டுவருகிறது. இதனால் சாராயம் மாத்திரமே இறக்கப்படாமல் நார்வகைகள் செய்வதற்கும், பசைகள் செய்வதற்கும் உபயோகப்பட்டு வருகிறது. வண்ணா வேலைக்கும் இதன் கஞ்சிப்பசை உபயோகப்பட்டு வருகிற தானாலும் அரிசிப் பசையைப்போல அவ்வளவு உயர்வாகக் கொள்ளப் படுவதில்லை. ஆனால், சோளப்பசை முதலிய புன்செய்ப் பயிர்ப் பசையைக்காட்டிலும்மேலாகக்கொள்ளப்படுகிறது. நெசவுத்தொழிலிலும் இப்பசை உபயோகப்பட்டுவருகிறது இது அரிசிப்பசை போல் உயர்வில்லாதது பற்றிச் சிறிது அரிசிக்கஞ்சியையும் இதனோடு கலந்து கொள்வதுண்டு.

நமது உழவாளிகளும் தங்களது வாழை வெற்றிலை முதலான பயிர் வகைகளுக்கு இதனை ஓர் துணைப்பயிராக வளர்த்து வந்தார்களானால், மேற் சொன்னபடியான பலவித சாதனங்களை நம் தேசத்திலேயே பெறுவதற்கும் இது தக்கஉபயோகமுள்ள பொருளாகவும் கொள்ளப்படும்.

---

# இந்திய தேசத்துப்

## பூர்வ சரித்திரச் சுருக்கம்

இந்திய தேசமானது, அதனது இயற்கையான அமைப்புகளினால் பல பரிசுத்தமான க்ஷேத்திரங்களையும் புண்ணிய நதிகளையும் பெற்று சுத்த மனதை உண்டாக்கக் கூடிய நிலைமையிலிருக்கிறதோடு, சீதோஷ்ணங்களின் பலபடித்தான தன்மையினால் தக்கவினை பொருள்களையும் வேறுபட்ட சுரங்கப் பொருள்களையும் விரும்பி முயற்சித்தார்க்குக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

அவ்விதமான புண்ணிய க்ஷேத்திரங்களும் புண்ணிய நதிகளும் சரித்திரகாலம் உதயமாவதற்கு வெகு முற்பட்ட காலங்களிலிருந்தே விளக்கமுற்று வருகின்றன. மேற்கண்டபடி தேசத்தின் வடக்கெல்லையாகிய இமாசலம் முதல் தேசத்தின் தெற்கெல்லையாகிய ராமேச்வரம் வரையிலுள்ள நதி க்ஷேத்திரங்களில் யாத்திரைபோய் வரும் யாத்திரிகர்களது கூட்டுறவினால், இத்தேசம் ஒரு தேசமாகவும் ஒரே ஒரு பொது மதத்தை யவலம்பித்ததாகவும் இருக்கிறது. அந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களையும் நதிகளையும் பற்றிச் சொல்லாத புராணங்களும் இல்லாமையால், இந்தப் பூமியே புண்ணிய பூமியாகக் கருதப்படுகிறது. இந்தியா வெகு காலங்கட்கு முன்னரே இலக்கிய இலக்கணங்களில் திருத்தமான நூல்களை யுடையதாகிப், பல புராணங்களையும் நாடகங்களையும் உடையதாகி, அவற்றில் குறிக்கப்பட்டுள்ள கதாநாயகர் குணங்களால் இத்தேசத்தாரது மனதைச் சிதறவிடாமல் ஆஸ்திக்யம் சத்யம் பரோபகாரம் த[illegible]ப்பு முதலிய உயர்ந்த குணங்களில் எப்போதும் பழக்கிக்கொண்டு வந்ததால், இதனைத் தர்ம பூமியென்றும் சொல்வதுண்டு. [illegible]த் தனத்தாலும் கனத்தாலும் குணத்தாலும் குலத்தாலும் [illegible] தரா லும் வண்மையாலும் சிறப்பெற்றோங்கிவரும் ஒரு தேசத்தை ஏனைய தேசத்தார் இச்சித்து அடிக்கடி வருவது ஒரு ஆச்சரியமாகாது. எனவே, அநேகவிதமான அயல் தேசத்தினர் இத்தேசத்தை நாடி பலப்பல காலங்களில் ஒருவர் பின்னொருவராக வந்து போயிருக்கிறார்கள்.

சரித்திரகாலம் ஆரம்பித்தது முதலாகவே இவ்விந்தியாவானது செல்வமும் சீரும் பொருந்திய தேசமாக இருக்கிறது. கி. மு. 3000 வருஷத்தில் பெரிய பேபிலான் தேசத்துடன் வியாபாரம் செய்து வந்திருக்கிறது. கி. மு. 2031 செமிராமியர் இத்தேசத்தின்மீது படையெடுத்து வந்ததற்கு அடையாளமாக ஒரு ஸ்தம்பத்தையும் நாட்டிவைத்துப் போயிருக்கிறார்கள். கி. மு. 2000 வருஷங்கட்கு முற்பட்டதாகக் கருதப்படும் எஜிப்டு தேசத்துக் கோரிகளிலுள்ள மம்மிகள் என்று சொல்லப்படும் விக்ரகங்கட்கு

மேற் போர்வையாக இந்தியாவின் நேர்த்தியான மஸ்லின் துணிகள் தாம் மூடப்பட்டிருக்கின்றன. கி. மு. 981 வருஷத்தில் இரண்டாவது ராமேஸஸ் என்பார் படையெடுத்து வந்திருக்கிறார். கி. மு. 980 வருஷத்தில் டைடர் ஹிராம் என்பவர் இந்தியாவோடு வியாபாரம் செய்திருப்பதற்கு அடையாளமாக, இன்றும் அந்தத்தேசத்தில் வழங்கும் ஹிப்ரூபாஷையில் அத்தேசத்து விளைபொருள்களிற் சில தமிழ்ப் பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. கி. மு. ஆறும் நூற்றாண்டில் பர்சியாதேசத்து டரையஸ் என்பவர் படையெடுத்து வந்து 10,00000 பவுன் நிறையுள்ள பொற்கட்டிகளை வருஷவாரியாகப் பஞ்சாப் சிந்து மாகாணங்களிலிருந்து கப்பம் பெற்றிருக்கிறார். கி. மு. 327 ௵த்தில் கிரேக்கதேசத்து அலெக்ஸாந்தர் என்பார் செமிராமியர் போலவே யமுனைநதிவரையில் படையெடுத்து வந்திருக்கின்றனர். கிறிஸ்து பிறக்கும் முன்னும் கிறிஸ்து பிறந்த பின்னும் ரோமாபுரியுடன் இந்தியா வியாபாரம் செய்து வந்திருக்கிறது. கி. மு. 20 ௵ ஆகஸ்டஸ் சீசருடனும் கி. பி. 99 ௵த்தில் ட்ரேஜானுடனும் உறவாடியிருக்கிறது. கிறிஸ்து பிறக்கு முன்னும் கிறிஸ்து பிறந்த பின்னும் பதினேழாவது நூற்றாண்டு வரையில் இருந்த மூத்த ப்ளினி என்பவரும் பெர்ணியர் என்பவரும் இந்தியாவினது பொன்விஷயமான பல செய்திகள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது பேபிலான் எஜிப்து பர்ஷியா பலஸ்தின் ரோம் இவைகள் எல்லாம் கடந்துவிட்டன. இந்தியா இருக்கிறது. அவைகளின் ஒவ்வொன்றின் உச்சமான காலத்திலும் இந்தியா உன்னத ஸ்திதியில் இருந்து வந்திருக்கிறது. அவைகளுடைய சரித்திரங்கள் தேடிக் காணவேண்டி யிருக்கிறது. இந்தியாவின் சரித்திரமோ இன்னும் எழுதப்பட்டுக் கொண்டுவருகிறது. இந்திய சரித்திரம் எப்போதும் புதிதுபுதிதான தொடர்ச்சியை யுடையதாகவே இருக்கும். ஏனெனில், இந்தத் தேசத்தின் செழுமையை நோக்கிப் பற் பலரும் பலகாலங்களிலும் பல நாடுகளிலிருந்தும் வந்து குடியேற இடந்தந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, இத்தேசத்துள் எத்தனை ராஜாங்கங்கள் ஆண்டு மாண்டிருக்கின்றன, எத்தனை இதர தேசப்படையெழுச்சிகளும் உட்கலகங்களும் உண்டாகி அழிந்திருக்கின்றன. ஆனாலும் இத்தேசமானது தனது நீர்மையில் குன்றாம லிருக்கின்றது. படையெடுத்து வந்தவர்களில் அநேகர்,

இங்கேயே தங்கள் வாசஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டு இந்தியர்களாகவே மாறியிருக்கின்றார்கள்.

“மிஸ்டர். வின்சென்ட் ஸ்மித் என்பவர் சொல்கிறார்:—கி. மு. ஏழாவது நூற்றாண்டின் மத்தியகாலத்தில், இமயமலைக்கும் நருமதை நதிக்கு மிடையில் 16 ராஜ்யங்கள ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. மகா அலெக்ஸாந்தர் வந்து போன பிறகு, சந்திரகுப்த மஹாராஜன் வடக்கில் உள்ள ஹிந்துகுஷ்மலையிலிருந்து நருமதை நதிவரையில் உயர்ந்த மாதிரியான ஒரே ராஜ்யத்தை ஸ்தாபித்து, அதற்குத்தானே சக்ரவர்த்தியாக இருந்தான். இந்த அரசாங்கப் பெருமையைப் பற்றி, மெகஸ்தனீஸ் என்பவர் பின்வருமாறு குறிக்கிறார்.—ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சிறிய குடியரசாகவே இருந்தது. அப்போது அடிமைத்தனம் என்பதே கிடையாது. ஸ்திரீகள் கற்புடையவர்களாகவும், புருஷர்கள் வீரம் கண்ணியம் சத்தியம் முதலிய பொருந்தினவர்களாகவும் இருந்தனர். சந்திர குப்தனுடைய குமாரன், இப்போதைய சென்னையின் வடபாகம் வரையிலும் அதே ராஜ்யத்தைப் பெருகும்படிச் செய்தான். பிறகு அசோகன் ஆட்சி புரிந்தபோது, அவன் தனது ஆட்சியின் பெருமையை மேனாட்டவரும் கேட்டு வியக்கும்படிச் செய்தான்.”

“தென் இந்தியாவோ மூன்று பெரிய ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையே சேர சோழ பாண்டிய ராஜ்யங்கள் என்பவை. அவர்கள் மூவரும் ஒரே தாய்ப்பாஷையைக் கொண்டு பல உயர்ந்த நூல்களை யுடையவர்களாக இருந்தார்கள். இவ்விராஜ்யங்கள் கி. மு. 2000 முதல் கி. பி. 1731 வரையில் நன்றாய்ச் செழித்திருந்ததாகத் தெரிகிறது. அதன் அரசர்களில் ஒருவன் கி. மு. 543-ல், இலங்கைமேல் படையெடுத்துவந்த விஜயன் என்னும் அரசனுக்குத் தனது மகளை மணம்செய்து கொடுத்தான். மற்றொரு சந்திர குப்தனால் கி. பி. நான்காம் நூற்றாண்டில் ஒரு பெரிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பெற்று, கி. பி. 340 வரையில் அவன் இந்தியசக்ரவர்த்தியென்று கொண்டாடப் பெற்றான். இவன் மகனது ராஜ்யகாலத்தில் தான் சீன யாத்திரியாகிய பாஹியன இந்தியாவுக்கு வந்து போனான். பாஹியன் சொல்வதாவது:—ஜனங்களுக்கு அதிக ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. சாலைகளில் திருடர் பயமென்பதே கிடையாது; அதனால் பிரயாணம் வெகு சுலபமாக இருந்தது. கொடுந்தண்டனைகள் இல்லை. அப்போதுதான் ஹன்ஸ் ஜாதியார் படையெடுத்து வந்தார்கள்.”

கி. பி. 644 ஆண்டில் இந்திய சக்ரவர்த்தியாகிய, ஹர்ஷ ராஜன் காலத்தில் வந்த சீன யாத்திரியாகிய ஹியூன் த்ஸாங் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"அக்காலத்து அரசன், பிரயாகையில் ஒரு பெரிய சபை நடத்தினன். அது 75 நாள் வரை மஹோத்ஸவமாக நடந்தேறியது. அச்சமயம் சுமார் 50,000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். அச்சமயம், அரசன், தான் ஐந்து வருஷங்களாகச் சேர்த்து வைத்திருந்த திரவியங்களை யெல்லாம் வந்து கூடியிருந்த வித்வான்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான். இப்படி ஐந்து வருஷங்கட்கு ஒரு முறையாக முப்பது வருஷங்கள் நடத்தினன். ஒரு வித்வானுக்கு ஒரு நாளைக்கு 100 பொன் நாணயமாக 10,000 வித்வான்கள் பரிசுபெற்றுச் சென்றார்கள்."

கி. பி. எட்டாவது நூற்றாண்டில் அரபி தேசத்தார் படையெடுத்து வந்து சிந்து தேசத்தை ஜயித்தார்கள்; என்றாலும் ராஜபுதனத்திலிருந்து பின்னால் துரத்தப்பட்டார்கள். கி. பி. 986 வருஷத்தில் கஜினி சுல்தானுடன் மகம்மதியர்கள் படையெடுத்து வந்து பெஷாவர் வரையிலும் நின்றுவிட்டார்கள். பின் அவன் மகன் மகம்மது என்பவன், 17 தரம் உட்புகுந்து கி. பி. 1021 வருஷத்தில் லாகூரில் தங்கிவிட்டான். பிறகு 5 வருஷங்கள் வரையில் ராஜபுத்திர அரசர்கட்குள் உட்கலகங்கள் உண்டாய்க் கொண்டிருந்தன. இவர்கட்குத் துணை செய்யவே மகம்மதியர் மறுபடியும் உள்ளேவந்து நுழைந்தார்கள். இந்தயுத்தத்தில் கீர்த்திபெற்ற பிருதிவிராஜன் கி. பி. 1193-ல் கொல்லப்பட்டான். இவனே டில்லிக்குக் கடைசி ராஜபுத்திர அரசன். பிறகு பட்டாணியர்களே சக்ரவர்த்தியானார்கள். அவர்கள் 1526வருஷம் வரையில் ஆண்டார்கள். பிறகு மொகலாய வம்சத்தைக் கண்டுபிடித்த பாபர் சக்ரவர்த்தி இந்தியாவை ஆண்டுகொண்டிருந்தான். இந்த மொகலாய அரசாட்சியும் 1857-ல் நடந்த சிப்பாய்க் கலகத்தோடு முடிவடைந்துவிட்டது. இப்படி இடையிடையே பலவகையான படையெடுப்புக்களும் யுத்தங்களும் நேர்ந்தாலும், தேசம் செழித்துக் கொண்டே இருந்தது. ஏனெனில், உழவாளிகளும் தொழிலாளிகளும் தங்கள் தங்கள் தொழிலைச் சரிவர நடத்திக்கொண்டுவந்து செல்வத்தைப் பெருக்கி, க்ஷத்திரியர்கட்கு யுத்தத்துக்கு வேண்டிய சாதனங்களை அப்போதைக் கப்போது உதவிக்கொண்டிருந்தார்கள். வந்தவர்களும் உழவாளிகளையாவது தொழிலாளிகளையாவது எவ்வகையிலும் கெடுக்காமலிருந்தார்கள்.

தென் இந்தியாவானது இந்தக்காலங்களிலெல்லாம் பெரும்பாலும் அமைதியுடனே இருந்து, தனக்குரிய வியாபாரம் கல்வி இவற்றில் விருத்தியடைந்து கொண்டிருந்தது. ஒரு சஜ புத்திர அரசர் கி. பி. 550 வருஷத்தில் தக்ஷிணத்தில் ஒரு சேர்த்தியான ராஜாங்கத்தை ஏற்படுத்தினார். அது கி. பி. 1190 வருஷம் வரையில் நடந்தேறியது. அல்லாவுடீனுடு சில முகம்மதியர் இந்தியாவில் புகுந்து 8 மணங்கு பவளங்களையும் வைரங்களையும் இன்னும் சில நகைகளையும் 1294 வருஷத்தில் அபகரித்துக் கொண்டுபோனார்கள். அதே விஜயநகர ராஜ்யம் கி. பி. 14-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 16-ம் நூற்றாண்டு வரையில் மறுபடியும் தழைத்திருந்தது. ஆக கி. பி. 11-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 17-ம நூற்றாண்டுவரையில் சிற்சில கலகங்களையும் பெற்றிருந்ததேனும் செல்வத்துடனும் நாகரிகத்துடனும் புதுப்புது நோக்கங்களுடன் தழைத்துக் கொண்டே வந்தது.

கி. பி. 1556 ம் வருஷம்முதல் 1605வருஷம் வரையில் ஆண்டு கொண்டிருந்த அக்பர் சக்ரவர்த்தி பொது நோக்கும் நீதியுமாகிய இவைகளையே தமது உறுதியாகக் கொண்டிருந்தார். அவர் குமாரர் ஜிஹாங்கிர் என்பவர் கி. பி. 1613 வருஷத்தில் இந்தியாவில் வியாபாரம் செய்யும்படி ஆங்கிலருக்கு உத்தரவு கொடுத்தார். ஜிஹாங்கிர் அரசருக்கு அக்காலங்களில் நிலவரி வரும்படியாக ரூ 36,25,00,000. கிடைத்துக் கொண்டிருநதது. அவர் மகன் ஷாஜஹான் காலத்திலும் இப்படியே இருந்து கொண்டிருந்தது. இவருக்குப் பிறகு இவரது மகன் ஔரங்கஜேபு காலத்தின் முடிவில் அதாவது கி. பி. 1706-ம் வருஷத்தில் இந்த ராஜ்யம் பலபடியாக நிலைகுலைந்து விட்டது. ஔரங்கஜேபு பொது நோக்கில்லாமல் ஹிந்துமதத்தை அழித்து மகம்மதிய மதத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்று சிறு நோக்குடையவராயிருந்தபடியால் உட்கலகங்களும் ஐக்கிய மின்மையும் ஏற்பட்டு இந்தியதேசம் எவ்விதத்திலும் பிந்திய தேசமாகத் தலைப்பட்டது. இவர் காலத்தில், இவருடைய பலாத்காரத்தினால், நிலவரியும் மற்றைவரிகளும் ரூ 57, 00,00,000. இருந்ததேனும் ஜனங்கட்கு சவுக்கியமேயில்லாமலிருந்தது. பிறகு நூறு வருஷத்திற் கெல்லாம் வரும்படி ரூ 51, 75,99,600 ஆகக் குறைந்து விட்டது.

இந்திய சரித்திரத்தில் பழமையென்று சொல்லப்படவேண்டியதில் மஹாராஷ்டிர ராஜாங்கம் ஒன்றுதான் மிகுதி. இந்தராஜாங்கமானது கீர்த்திபெற்ற சிவாஜீ என்னும் மஹாராஷ்டிர வீரரால் ஏற்படுத்தப்பட்டது. இவரது சரித்திரம் தனிமையான ஒரு வியாஸமாக எழுதப்பட வேண்டியதே.

பத்திராதிபர்.

# தருமபரிபாலனம்.

(202 ம் பக்கத் தொடர்ச்சி.)

இல்லறம் வீடுபேற்றையுந் தரவல்லதென்பது—அருளுண்டாகவே துறவறத்திற்காரம்பமாயிற்று இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் துறவறவியலின் முதற்கண் அருளுடைமை யென்னும் அதிகாரத்தை வைத்தது மென்க. ஆகவே இல்லறத்தானருள் தோன்றி அவ்வருள் துறவறத்திற்குக் காரணமாகித் துறவறம் வீடுபேற்றிற்குக் காரணமாகின்றமையிற் றொடர்புடைமையால் இல்லறமும் வீடுபேற்றிற்குக் காரணமாமென அறிக. "இல்லறமே வாழ்வினுக்கு முயர்களிக்கும், வித்தமார்துறவறத்தின் வேருமாமெனும் வேதம்" என்ற ஆன்றோர் வாக்கியமும் நன்குணரத் தக்கது. மற்றொரு வகையானுங் காரணமாதலைக் காட்டுவாம். இல்லறத்தின்கண் வழுவாதொழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவந் தேயும்; பாவந்தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழியுந்தன்மையவாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கணாசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம்; அஃதுண்டாகத் தத்துவ ஞானம் பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும். ஆகலின், இவ்விரண்டு பற்றுக்களையும் இம்முறையே உவர்த்து விடுத்து வீடுபெறுதலாமாதலின், நன்குந் தொடர்புடைமை பற்றி இல்லறம் வீடுபேற்றிற்குக் காரணமானமை அறிக, துறவறத்தான் வீடுபேறெய்துதலைப் பின்னர்த் துறவறங் கூறுழிக் கூறுவாம். ஆண்டுக்காண்க.

இனி இத்தகைய இல்லறத்தைப் பரிபாலித்தலாவது, எவ்வாறென்னிற் கூறுதும். நற்குண நற்செய்கைகளும் எழுமையுந் தொடரும் உழுவலன்பும் வாய்ந்த ஓர் கன்னிகையைப் பெற்றோர்

மனமுவந்து அங்கியங் கடவுள் சாட்சியாக நீர்பெய்து கொடுக்க மணந்து உருவத்தார்விருவகைப்பட்டுத் தோன்றினும் மனத்தானொரு தன்மைப்பட்டு முன்னோர்க் கூறிய இல்லற தர்மங்களை உலகோர் வழுவின்றி மேற்கொண்டொழுகுதலே இதன் பரிபாலனம் ஆம். மனையொவ்வாவழி இல்வாழ்க்கை சிறிதும் நடைபெறாதாம். பெண்ணின் நற்குணங்களாவன:—துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன:—வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மையும், ஒப்புரவு செய்தலு முதலாயின.

நாயகன் நாயகி என்ற இருவரது மனங்களும் ஒற்றுமைப் பட்டிருத்தல் வேண்டுமென்பதை வற்புறுத்தத்துணிந்த நம் அரும் பெரும்புலமைச் சான்றோர்கள், இல்வாழ்க்கையானது தருமமென்னும் சரக்கை ஏற்றிவைத்தற்குரியதோர் சகடமென்றும், இச்சகடம் நாயகன் நாயகி என்ற இரண்டெருதுகள் கருமமென்னும் நுகத்தைப் பற்றி முறையே ஈர்த்தாலத்துணைத் தூரமுஞ் செல்லுமென்றும், இவ்விருவருள் ஒருவர் செல்லுமார்க்கத்தே மற்றொருவர் செல்லாது மாறுபட்டுச் செல்லுவாராயின் சிறிது தூரமுஞ் செல்லாதென்றும் உவமித்துள்ளார்கள்.

" தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமெனும்
இருவராய் முறைசெலுத்தி னெத்துணைத் தூரமுஞ்செல்லும்
ஒருவராய்ப் பூண்டிழுப்பி னோரிறையுஞ் செல்லாதால்."

" மருவிய காதன் மனையாளுந் தானு
மிருவரும் பூண்டுய்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று."

" காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கல்
கண்ணிரண்டு மொன்றையே காண்."

"எஞ்ஞான்றும், காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம்"

என்பவற்றானறிக.

இதனைப் பொதுவியல்பு பற்றி யெடுத்துக் கொள்ளினும், இதன்கண் மானுடதருமமும் புருடதருமமும் ஸ்திரீதருமமும் முதலியனவாகப் பலவகைத் தருமங்களும் அடங்கி யிருக்கின்றன வெனத் தெரிந்து கொள்க. இவைகளை யெடுத்துக் காட்டிவிளக்கலோ மேனும் விரியுமென விடுத்தாம்.

## துறவறம்.

துறவறமாவது நாகந்தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்றுமறுத்து இந்திரிய வசமறுத்து முற்றத் துறத்தல்.

"படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவர்மெய் பனிப்ப நோற்றிட், டுடனாகவைம்பொறியும் வென்றார்க்கு" என்றார் சிந்தாமணியாரும். அகப்பற்று—தானல்லாதவுடம்பை யானென்று கருதல். இதனை வடநூலார் அகங்காரமென்ப. புறப்பற்று—தன்னோடியைபில்லாத் பொருளை எனதென்று கருதல். இதனை வடநூலார் மமகாரமென்ப. அவற்றை யறுத்தலாவது—குருவினிடத்துப் பெற்ற உறுதிமொழிகளாலும் யோகப்பயிற்சியாலும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின் கண்வைத்தபற்றைவிடுதல். இந்திரிய வசமறுத்தலாவது—மெய்வாய்கண்மூக்குச்செவி என்ற பஞ்சேந்திரியங்களின் வசப்பட்டு விஷயங்களிற் பற்றுவைத்தலை யொழித்தல். முற்றத்துறத்தலாவது—பொருள்களையும் இருவகை யுடம்பினையும் உவர்த்துப் பற்றறவிடுதல். இருவகை யுடம்பாவன—அருவுடம்பும் உருவுடம்புமாம். அருவுடம்பு—சூக்குமசரீரம். உருவுடம்பு—தூலசரீரம். இன்பதுன்பங்களான் உயிரோடு ஒற்றுமை யெய்தி இவ்வுடம்புகளும் யானெனப்பட்டு அகப்பற்றாதலின் அவற்றைவிடுதல் கூறப்பட்டது.

இனித் துறவிகளுக்குச் சரியை கிரியை யோகம் ஞானம் என்பன முக்கியமாக வேண்டப் படுவனவாம். சரியையாவது அலகிடல் முதலியன. கிரியையாவது பூசைமுதலியன. யோகம் எண்வகைய; அவை இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதியென்பன. இவைகளின் விரிவும் ஞானமும் குருமுகத்தாற் கேட்டு ஸ்வாநுபவத்தால் அறியத்தக்கன. இவைகளையும் இல்லறத்தான் மேற்கொள்ளவேண்டுமெனக் கூறிய தருமங்களையும் அதற்குரிய துறைகளைவழங்குவர் ஆசிரியர் அடியார்க்கு நல்லார். இவைகளெல்லாம் சிலப்பதிகாரம் ஊர் காண்காதை 11-வது வரியாகிய "அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்" என்றதன் விசேட வுரையாலுணரத் தக்கன.

இனி ஆசிரியர் பரிமேலழகியார் துறவறம் விரதங்களுஞ்ஞானமுமென்று இருவகைப்படுமெனக் கூறியுள்ளார். அவற்றை "இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவறமாவது இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களுங், அவற்றான் அவை தூயவாய வழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும். அவற்றுள் விரதங்களாவன—இன்னவறஞ் செய்வலெனவும் இன்னயாவர் தவிர்வலெனவும் தம்மாற்றலுக்கேற்பவரைந்து கொள்வன. ஞானமாவது—வீடு பயக்குமுணர்வு" எனக்கூறியுள்ளனவற்றானறிக.

துறவறத்தைப் பரிபாலித்தல் எவ்வாறெனிற் சொல்வாம்.

"கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம், போக்கு மதுவிளிந்தற்று" என்ற பொய்யா மொழியைக் கொண்டு, ஒருவனுக்குப் பெருஞ் செல்வம் வருவது, கூத்தாடுகின்ற ஓர் அரங்கினிடத்தே அதனைக் காணும் பொருட்டு வருகின்ற ஜனக்கூட்டத்தையொக்குமென்றும், அச்செல்வம் போவது, அக்கூத்தைக் காணும்பொருட்டு வந்த ஜனங்கள் கூத்து முடிந்தவழிப் போய்விடுதலையொக்குமென்

றும் உணர்ந்து புறத்ததாகிய செல்வத்தின்கணுள்ள பற்றை யொழித்தல் வேண்டும். பின்னர் "உறங்குவது போலுஞ் சாக்காடு நக்கி, விழிப்பதும் போலும் பிறப்பு" என்ற பொய்யா மொழியால், உயிர்கட்குத் தூங்குதலும் விழித்தலும் இயல்பாய் வினையின் மாறி மாறி வருதல்போலச்சாதலும் பிறத்தலும் இயல்பாய் வினையின் மாறிமாறி வருமென்றுணர்ந்து அகத்ததாகிய யாக்கையின்கணுள்ள பற்றினை யொழித்தல் வேண்டும். "நெஞ்சிற் றுறவார் துறந்தார் போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணா ரில்" என்ற பொய்யா மொழியின் பொருளை யுணர்ந்து பொய்வேடங் கொள்ளாதொழிதல் வேண்டும். மேற்கூறிய மூன்றனையும் ஒழித்தலுடன் திருக்குறட்டுறவறவியற்கண் அருளுடைமைமுதற்கொல்லாமை யீறாகச் சொல்லப்பட்ட விரதங்களையும் பிற துறவறத்திற்கென நூல்களிற் கூறப்பட்டுள்ளவைகளையும் அநுட்டித்துக் கொண்டு ஈஸ்வரத்தியானமே பொழுதுபோக்காக இருப்பது தான் இதன் பரிபாலனமாம்.

துறவறமே எளிதில் வீடுபேற்றைத் தரவல்ல தென்பது:— சுருக்கமாக "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றார் பெரியார். பற்றறுவதே துறவாதலின் அதனாலுற்றது வீடென எளிதிலறிக. பற்றறுதலே துறவென்பதை யாவர்க்கும் அறிவிக்கும்பொருட்டாகவே நம் நாயனார் அவாவறுத்தலென்னும் அதிகாரத்தைத் துறவறவியலின் இறுதிக்கண்வைத்துள்ளார். அவாவற்றவே உற்றது வீடு என்பதை அறிவித்தற்பொருட்டாகவும், துறவறத்தால் இறுதியிலெய்தும் பயன் வீடே என்பதை யறிவித்தற் பொருட்டாகவும் அவாவறுத்தலென்னும் அதிகாரத்திறுதிக்கண், "ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே, பேரா வியற்கை தரும்" என்னும் அருமைத் திருக்குறளையும் கூறியுள்ளார். இக்குறளின் விசேடவுரையில் ஆசிரியர் அரிமேயின்புறாஉம் பரிமேலழகியார் "களிப்புக்கவற்சிகளும் பிறப்பிப்பிணி மூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி உயிர்நிரதிசய வின்பத்ததாய் நிற்றலின் வீட்டினைப்பேராவியற்கை யென்றும், அஃது அவாநீத்தவழிப்பெறுதல் ஒருதலையாகலின் அந்நிலையே தருமென்றுங் கூறினார் . . . . . . . . இதனால் வீடாவது இதுவென்பதூஉம் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே யுளதா மென்பதூஉங் கூறப்

பட்டன" என்று கூறியவற்றையும் ஆய்ந்து தெளிக. இன்னும் "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்றை விடற்கு" என்ற குறளால் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய பற்றுக்களை விட்டவழிப் பற்றப்படுவதொன்று வேண்டும். அப்பற்றப்படுவதுயபற்றற்றான் பற்றாகியவீட்டு நெறியாம் என்றுங்கண்டு தெளிவதுடன் அடியில் வரும்பாடல்களையுங் கண்டு ஆராய்ந்தறிந்து கொள்க.

"நன்றாய்ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியமெல்லாமீர்த்
தொன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பத்துன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்றா
லன்றேயப்போதேவீடுமதுவேவீடுவீடாமே."

(திருவாய்மொழி ௧௮-ம் பதிகம் ௬)

"மக்களைக் குருக்க டம்மை மாதரை மற்று ளோரை
யொக்குமின் னுயிரன் னாரை யுதவிசெய் தாரோ டொன்ற
துக்கமித் தொடர்ச்சி யென்று துறப்பருந் துறவு பூண்டோர்
மிக்கது கலனே யாசி வீடுபே றளிக்கு மன்றே."

(இராமாயணம்)

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவது அறிகென் றருளி"

(மணிமேகலை)

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" (திருக்குறள்)

இதுவரையிலும் தருமங்களின் பாகுபாடுகளையும் அவற்றைப் பரிபாலிக்கும் விதங்களையும் ஒருவாறு கூறினும். மேலும்இவற்றின் விரிவுகளை ஆன்றோர் வாயிலா லுணர்க.

குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

S. ஆழ்வாரையங்கார்.
உதவியுபாத்தியாயர் க. வி. கலாசாலை, கோநகர்.

# சபை நிகழ்ச்சி விவரங்கள்.

## கோநகர்.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை.

பிங்களஞு ஆடிமீ ௰௨உ (27-7-17) வெள்ளிக்கிழமை காலையில் விநாயகக்கடவுளுக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் வைதிக விதிப்படி அபிஷேக ஆராதனைகள் நடந்தன.

12 மணிக்குப் பிராமண சமாராதனையும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்றன.

பிற்பகல் 4 மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ கா. சுந்தரேசவையரவர்கள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தைக் கேட்டோர் மனங்குளிர சோணவர்ஷம் சொரிந்தாற்போல் மூன்று மணி நேரம் உபந்நியசித்தார்கள்.

இரவு 8½ மணிக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய வெள்ளையானை வாகனத்தின் மீது அம்பாரியில் திவ்ய புஷ்பாலங்கிருதராய் ஆரோகணித்து வருணிவலம் வந்த காக்ஷியைப் பக்தகோடிகள் தெரிசித்து ஆனந்தபரவசரானார்கள்.

சம்பந்தன்.

---

## பலவான்குடி மணிவாசக சங்கம்.

இன்று திருவருட்பேற்றால் நம்மணிவாசக சங்கத்தின் மாதக்கூட்டம் கூடிற்று. மாணவர்கள் கடவுள்வாழ்த்துக் கூறிய பின்னர்க் கோயிலூர் ஸ்ரீ காசிகானந்தசுவாமிகள் ஜீவகாருண்யம் என்பதையும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ திருச்சிற்றம்பலம் சுவாமிகள் ஈசுவரபக்தியென்னும் விஷயத்தையும் அரிய பிரமாணங்களோடு அழகாக உபந்நியசிக்க ஆத்தங்குடி ஸ்ரீ சி. வீர. கதிரேசச் செட்டியாரால், தேவகோட்டை வைசியசிவானந்த சபையோரால் பிரசுரித்து அனுப்பப்பெற்ற பெண்கல்வி என்னும் வியாசம் படிக்கப்பெற்றது. ஆவணி மாதம் 14உ 15உ நடைபெறவேண்டிய முறைகளைப்பற்றி ஸ்ரீ ராம-கு-ராம. இராமசாமிச்செட்டியார் வேண்டிக்கொள்ள சகத்தாரனைவரும் ஆமோதித்து அதற்கேற்றபடிகள் முறையாகத்தீர்மானிக்கப்பட்டது. ராஜவாழ்த்துக் கூறிப் பின்னர் சபை மங்களகரமாய் நடந்தேறியது.

---

## புதுவயல் ஞானப்பிரகாச சபை.

ஸ்ரீ பரமேசுவரனது திருவருளால் இன்று (16-8-17) இச்சபையின் மாதாந்தக் கூட்டமானது, காரைக்குடி கம்பராமயணப் பிரசாரகர் மிஸ்டர் எம். வி. கோவிந்தராஜ ஐயங்காரின் அக்கிராசனத்தின் கீழ்க்கூடியது. அச்சபையில் "கல்வியும் தனமும்" என்னும் விஷயத்தைப்பற்றி மிஸ்டர் நாகலிங்க தேசிகரும், "நக்கீரரும் அவரது நூல்களும்" என்னும் விஷயத்தைப்பற்றிப் பண்டிதர் மிஸ்டர். டி. வைத்தியநாத ஐயரும், "தொழிற்கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றிப் மிஸ்டர். ஆர். இராஜகோபாலராவும் உபந்யாஸம் செய்தார்கள். பின்னர் அக்கிராஸனாதிபதியவர்கள் உபந்யாஸ விஷயங்களைப் பொது ஜனங்கள் மனதிலும் பதியுமாறு எடுத்துச் சொல்லிவிட்டு, நகரத்தார் தொழிற்கல்வியை விருத்திசெய்யத் தொழிற் கல்விச்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஸ்வதேசிய வுணர்ச்சியை விருத்திசெய்ய வேண்டுமென்றும் சொன்னார். பின்னர் மஹாயுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு வெற்றிகிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்யப்பட்ட பின், சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை மங்களகரமாக நிறைவெய்தியது.

ஆர். ராஜகோபாலராவ்.

பிரஸ். ரிபோர்ட்டர்.

## வித்யாபரிபாலன சங்கம்.

### நாட்டரசன் கோட்டை.

பிங்களஸு ஆடிமீ ௨௰௭ (11-8-17) இல் இச்சங்கத்தின் நான்காவது உபந்நியாஸம் நடந்தது. அதில் சிவகெங்கை மஹாராஜா ஹைஸ்கூல் போதகாசிரியர் பிரம்மஸ்ரீ கோதண்டராமையரவர்கள், B. A. அக்ராசனம் வகித்தார்கள். ஷெ ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் மகா ராஜஸ்ரீ மு. ப. கணபதி பிள்ளையவர்கள் தமிழை வளர்க்குமுறை என்ற விஷயத்தை எடுத்துக் கொண்டு சங்கச் செய்யுள்களிலும் திருக்குறள் கம்பராமாயணங்களிலும் தமக்குள்ள ஆராய்ச்சியை நன்குவிளக்கி உபந்நியசித்தார்கள். சிவகெங்கை வக்கீல் பிரம்மஸ்ரீ P. S. இராமஸ்வாமி ஐயரவர்கள் தமிழ்ப் பாஷையை வளர்ப்பதே தமிழ் மக்களின் கடமை என்று உபந்நியசித்தார்கள். திரவி ஸ்ரீ. உ. வே. ப. ஸ்ரீ இராமையங்காரவர்கள் தமிழ்ப்பாஷையைக் கற்றவர்களும் ஆங்கிலம் கற்றவர்களும் ஒருங்குகூடி ஜடதத்வ சாஸ்திரங்களை வெளிய தமிழ் நடையில் மொழி

பெயர்த்து உலகம் நன்மை அடையும்படி செய்வதே வித்வான்களின் கடமை என்று உபந்நியசித்தார்கள். சுப. வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் தமிழ் மொழி தனிமொழியென்றும் இவ்வூரிலுள்ள கண்ணுடைநாயகி அம்மன் கிருபையால் இச்சங்கமானது அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றும் பேசி, ஒருவாழ்த்துப் பாடலும் சொன்னார்கள். பிறகு மஹா-ரா-ரா-ஸ்ரீ மு. ப. கணபதிபிள்ளையவர்களாலும் சிவகங்கை ஜவுளிக்கடை பெரியசாமி சேர்வைகாரராலும் வாழ்த்துப் பாடல்கள் சொல்லப்பட்டன. பின்னர் அக்ராசனபதியவர்கள் தமிழ் ஒருதனிப்பாஷை என்றும் அதைவளர்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோமென்றும் ஜடதத்வ சாஸ்திரங்கள் தமிழில் வரவேண்டியது அவசியமென்றும் அழகாகவும் சிறப்பாகவும் பேசிச் சபையைச் சிறப்பித்தார்கள். பிறகு கடவுள்வாழ்த்து ராஜவாழ்த்து முதலியவைகள்கூறச் சபைசிறப்பாய் நிகழ்ந்தது.

இங்ஙனம்.

ப. ஸ்ரீ. இராமையங்கார்.

தலைமை உபாத்தியாயர்.

---

## வைத்தியக் குறிப்புகள்.

### ஜ்வரம்.

யானைக்கு உண்டாகும் ஜ்வரத்துக்கு பாகலம் என்றும், குதிரைகளின் ஜ்வரத்துக்கு அகிதாபம் என்றும், பசுக்களின் ஜ்வரத்துக்கு கோகர்ணகம் என்றும், பக்ஷிகளின் ஜ்வரத்திற்கு மகரம் என்றும் பெயர். இவ்வாறே விருக்ஷம் முதலியவற்றிற்கும் ஜ்வரம் உண்டாவதுண்டு.

---

### கறியுப்பின் உபயோகம்.

வைத்தியமுறையில் கறியுப்பு அநேகவகையில் உபயோகிக்கப்பட்டுவருகிறது. விசேஷமாக இதனை நீரில் கரைத்துத்தான் வாயின் மூலமாக உள்ளுக்கும் தோலின் மூலமாக இரத்தத்திலும் பிரயோகிக்கப் பட்டு வருவதுண்டு. புராதன வைத்தியர்கள் உப்பை ஜலத்தில் கரைக்காமல் ரணங்களில் கட்டுவதற்குமாத்திரம் உபயோகித்து வந்தார்கள். குடலில் உண்டாகும் துர்நீர்களை சோதனம் செய்யவும் பசியை விருத்தி செய்யவும் ஸாதாரண உப்பை அப்படியே உபயோகிக்கலாம் என்று டாக்டர் கேகாஸ்ரவா என்பவர் கூறுகிறார்.

---

## கவனிக்கவேண்டியவை.

1. ஒருவர் உபயோகித்த துணியை மற்றொருவர் எதற்கும் உபயோகிக்கக்கூடாது.

2. தேகவுழைப்புச் செய்தபிறகு ஈரமுள்ள இடங்களில் உட்காரக்கூடாது.

3. பலருக்குப் பொதுவான பாத்திரத்தை யொருபோதும் குடிப்பதற்கு உபயோகிக்கக்கூடாது.

4. பாதங்களை ஈரமாக வைத்திருக்கக் கூடாது. (அதனால் கபஜ்வரம்உண்டாகும்.)

5. ஜலதோஷத்திற்கு ஆரம்பத்திலேயே ஏற்ற சிகித்ஸை செய்யத்தவறக்கூடாது.

6. சூடான அறையில் மிகவும்கனமான உடைகளைத்தரித்துக்கொண்டு இருக்கக்கூடாது.

7. சிறுவர்கள் அசௌக்கியமா யிருக்கையில் அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூடாது.

8. தொண்டைப்புண் எவ்வளவு அற்பமாயிருந்தபோதிலும், சீக்கிரத்தில் அதற்குச் சிகித்ஸை செய்யாமலிருக்கக்கூடாது.

9. குழந்தை அசௌக்யமானால், உடனே வைத்தியரை அழைத்து ஏற்ற பரிகாரம் செய்வதில் தவறக்கூடாது.

Family Doctor.

## படுக்கையில் படுத்துக்கொண்டே படிப்பதால் வரும் தீங்கு.

இவ்வாறு படிப்பவர்கள் சாதாரணமாகச் செய்யும் வழக்கம் என்னவென்றால், வலதுமுழங்கையைப் படுக்கையில் அல்லது தலையணையில் ஊன்றி, அவ்வலது கையில் தலையைச்சாய்த்து அமர்த்திக்கொண்டு, இடது கையில் புஸ்தகத்தை ஏந்தியவாறு சாய்ந்திருப்பதேயாம். குளிர்ந்தநேரங்களில் (முக்யமாகக் குளிர்காலங்களில்) வலதுதோளும், இடதுகையும் மறைக்கப்பட்டுப் போய்ப் போர்க்க முடியாதவைகளாகித் திறந்து வைக்கப்படுகின்றன. பிறகு சிலநேரம் கழிக்க, அந்த இரண்டு பிரதேசங்களிலும் வலியும் இசிவும் உண்டாயிருப்பதாக உணர்ந்து கொள்ளுகிறார்கள். அவ்வுணர்ச்சியைத்தரும் குறிதான் ஆமவாதம் என்னும் வியாதிக்கு ஸம்பந்தப்பட்டதாக இருக்கிறது. கையின் உட்புறத்தி

ளுள்ள நரம்புகளினூடே அவ்வலிபரவியிருப்பதாகவும், முக்கியமாய்க் கையின் பூட்டுகளுக்கு எதிரில் அவ்விதநோய் ஏற்பட்டிருப்பதாகவும் உணரப்படும். நரம்பைப்பற்றியும் பூட்டுகளைப் பற்றியும் இரண்டு விதங்களாக இந்நோய் ஸம்பவிக்கும். சில கேஸ்களில் மாம்ஸ பேசிகள் இதனால் க்ஷயமடைவதும் உண்டு. தோளின் பூட்டில் இந்தநோயால் கிரமமாக வீக்கமும் வலியும் விருத்தியாகக் கூடும். கையைத் தூக்கவும் அசைக்கவும் சக்தி குறைந்துவிடும். இப்படிப்படிப்பவன் இவ்வழக்கத்தை விட்டுவிட்டால் கிரமமாக இவ்விகாரங்கள் குறைந்துவிடும். ஆனால் பெரும்பாலும், இதன் காரணம் இன்னதென்று யோசிக்காமலே அவ்விதம்படிக்கும் அப்பியாஸத்தை மேற்கொள்ளுகின்றனர். தோளுக்குள்ளுக்கு வெளிப்படையாகக் காட்டாமல் படித்தால்கெடுதல் உண்டாவதில்லையென்று தெரியவருகிறது. இவ்வலியுண்டானால், சூடான ஒற்றடங்களாலும் பலமாகப் பிடிப்பதனாலும் சிறிது நிவ்ருத்தியுண்டாவதுண்டு. படுத்தபடியே படிப்பது முதலில் ஸௌகரியமாகத் தோற்றியபோதிலும், அதனால் அடுத்தாற்போல் இக்கதிக்கு ஸம்பவிப்பதால், படுக்கையில் படுத்துக்கொண்டே படிக்கும் வழக்கத்தை விட்டு விடவேண்டும்.

---

# கர்ப்பத்தில் ஆண் பெண் உண்டாகுங் காரண நிர்ணயம்

---

டாக்டர். ஜெ. எஸ். ப்ரிபரான் என்பவர், கர்ப்பத்தில் ஆண் சிசுவாவது பெண் சிசுவாவது உண்டாவதற்குக் காரணம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். அவருடைய சித்தாந்தத்திற்கு ஆதாரமாக 1,000 கேஸ்களில் பரிசோதனைகள் செய்து பார்த்துக் கடைசியில் தத்துவத்தை வெளிப்படுத்தினார். இந்த 1,000 கேஸ்களில் நூற்றுக்கு 98 வீதம் வெகுதிட்பமான பரீக்ஷைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்திரீக்கு மாதவிடாய் உண்டான தேதிமுதல் மற்றொரு மாதவிடாய் உண்டாகவேண்டிய நாள்வரையிலுள்ள தினங்களின் மொத்தத்தை இரண்டு சரிபாதியாகப் பங்கிட்டு, அவற்றுள் முதற் பாகிநாட்களில் எந்தத் தினத்தில் கர்ப்பம் ஸம்பவித்த தென்பதும், இரண்டாவது பாகிநாட்களில் எந்தத்தினத்தில் கர்ப்பதாரணமானது நேரிட்டதென்பதும் குறித்துக்கொள்ளப்பட்டது. மாதவிடாய் உண்டான தேதிமுதல் 15 நாட்கள் வரையில், அதாவது மாதவிடாயான முதற் பகுதியைச் சேர்ந்த நாட்களில், ஆர்த்தவ பீஜங்கள் பெண் சிசுவுக்கு ஸம்பந்தப்பட்டவையாகவும், இரண்டாவது பகுதி

யான நாட்களில் முக்கியமாய் மற்றொரு ருதுகாலத்திற்கு முந்திய 10 நாட்களில் புருஷப் பிரஜைக்கு ஸம்பந்தப்பட்டவையாகவும் உண்டாவது வழக்கம் என்று அவருடைய பரிசோதனையில் தெரியவந்தது. சுக்லமும் ஆர்த்தவ பீஜமும் எந்தத்தினத்தில் ஒன்றாகக் கலந்துவிடுமோ அந்தத்தினமே ஸ்திரீ புருஷப் பிரஜைகளின் நிர்ணயம் செய்வதற்கும் அவசியமானதாம். ஸ்திரீகளுடைய ஆர்த்தவ பீஜமே ஸ்திரீப் பிரஜைக்காவது புருஷப்பிரஜைக்காவது சுதந்தரமாகக் காரணமாகும். இது விஷயத்தில் புருஷருடைய சுக்ல தாதுவின் குணாகுணங்கள் ஒருவித ஸாதக பாதகங்களையும் உண்டுபண்ணக் கூடியவையல்லவென்பது அவ்வாராய்ச்சிக்காரருடைய ஸித்தாந்தமாகும். ஆர்த்தவபீஜங்கள், ருதுவான முதற்பகுதி நாட்களுக்கு ஸம்பந்தப்பட்டவையானால், (13 நாட்களுக்கு முற்பட்டவையானால்) அவை பெண் சிசுக்களையும், ருதுகாலத்தின் பிற்பகுதி நாட்களைச் சேர்ந்தவையானால் ஆண் சிசுக்களையும் உண்டாக்கக் கூடியவை. அல்லது ருதுவான தினத்திற்குப் பிறகு 10 அல்லது 12 நாட்கள் வரையில் பெண் சிசு உண்டாவதற்கும், மற்றொரு மாசவிடாய் உண்டாகக்கூடிய தினத்திற்கு முந்திய 10 நாட்களும் வரிசையாக ஆண்சிசு உண்டாவதற்கும் தகுந்தவையென்று நிச்சயிக்கப்படுகிறது. இவ்விஷயம் மெடிகல் ரிகார்ட் என்னும் வைத்தியப் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது.

வைத்தியகலாநிதி.

## ஸோடாஉப்பின் புதியஉபயோகம்.

கீல் வாயுவால் துன்பப்படுபவருக்கு ஸோடா உத்தமமான ஔஷதமாகும். சில பிணியாளிகளுக்கு அடியில் வருமாறு பிரயோகித்ததில் ஆச்சரியப்படும்படி எதிர்பாராத குணம் உண்டாயிற்று. எவ்வெவ்விடங்களில் வீக்கமும் வலியும் உண்டாயிருக்கின்றனவோ, அவ்விடங்களில் ஸோடாஉப்பை ஜலத்தில்கலந்து, மாவைப்பிசைந்து கனமாகப்பூசிவிடவும். ஈரம் உலர்ந்து போகாதபடி அப்பூச்சைக் கவனித்து வரவேண்டும். அதிகமாகப்பணச் செலவு செய்து சிரமப்பட்டுச் செய்யப்படும் இதர சிகித்ஸைகளைவிட இவ்வற்பமான சிகித்ஸையானது மிகவும் மேலானதென்று தெரியவருகிறது.

M. S. Journal.

வைத்தியகலாநிதி.

# மதிப்புரை.

---

## ஞானதீபிகை அல்லது தர்மதீபிகை.

பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியகாலத்தில் சீன தேசத்தில் இருந்த கயாட்ஸ்ஃ என்னும்சீனபண்டிதரால் கண்டெடுக்கப்பெற்றுப்பிறகு, அதை அந்த ஸம்ஸ்க்ருதபாஷையிலிருந்துச் சீன பாஷையில் மொழிபெயர்க்கப்பெற்றது. பிறகு 1749-ம் வருஷம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்றது. பிறகு இத்தமிழ் நாட்டாருக்கும் உபயோகமாகும் பொருட்டுத் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதனுள் ஸர்வமத ஸகோதரத்துவமே பெரிதும்காணப்படுகிறது; அன்றியும் ஒருவன் உத்தமபுருஷனுவதற்கு வேண்டிய தினசரி ஸாதனங்கள் மிகஅழகாக எழுதப்பெற்றிருக்கின்றன. ஸ்திரீ புருஷர்கள் தங்கள் வாழ்நாளில் அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் பிறரிடம் நடந்துகொள்ளவேண்டிய தர்மங்களையும்பிறரிடம் நடந்துகொள்ளவேண்டிய வழிகளையும் தேசத்துக்கும் அரசனுக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் ஆசிரியர் விரித்து எழுதியிருக்கிறார். இது இருபாலார்களின் வாழ்க்கைக்கிரமத்தை ஸரியாக அமைத்து ஸன்மார்க்கத்தையும் நீதியையும் உண்மையையும் நாயத்தையும் தர்மத்தையும் போதிக்கும் ஒரு அரியநூல். ஒவ்வொரு தேசாபிமானியும் ஒவ்வொரு கிருஹஸ்தனும் இதை வாசிக்கவேண்டியது. விலை ரூ 0—10—0 வேண்டுபவர் இந்தவிலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

ஆர்தர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்

ஏஜென்ஸி.

சென்னை ஈ.

---

**மரணபயம் வேண்டாம்:**—இது ஒரு சிறுநூல். C, W. லெட்பீட்டர் என்பவர்களால் இங்கிலீஷில்எழுதப் பட்டதிலிருந்து, ம-ா-ஸ-ஸ்ரீ ப.. நாராயணையர் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது. காசியிலுள்ள பிரஹ்மஞான ஸபை இந்தியன் செக்ஷனால் பிரசுரிக்கப்பெற்றது. வேண்டுபவர், மதுரை பிரஹ்ம ஞானமந்திரத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணு 0—2—0

**சைவப்பிரகாசம்:**—இந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் சித்திரைமாதத்திய ஸஞ்சிகை வரப்பெற்றோம். இதனுள் பல அரியவிஷயங்கள் தக்கபண்டிதர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. 'சேக்கிழார் தமிழ்ப்பயிற்சி, முதலிய சில

விஷயங்கள் மிகவும் அருமையாக எழுதப்பெற்றிருக்கின்றன. இதன் வருஷ சந்தா ரூ. 2—8—0. வேண்டுவோர் கோயம்புத்தூருக்கு அடுத்த பேரூரில் சைவப்பிரகாச ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

பத்திராதிபர்.

---

# ஆபரணம்.

1. பிராமணன் வித்தையால் விளங்குகின்றான்; க்ஷத்திரியன் விஜயத்தால் விளங்குகின்றான்; செல்வமுடையோன் தானத்தினால்விளங்குகின்றான்; குலஸ்திரீ நாணத்தினால் விளங்குகின்றாள்.

2. கைக்குத் தானம் ஆபரணமாம்; கண்டத்திற்குச் சத்தியம் ஆபரணமாம்; சுரோத்திரத்திற்குச் சாஸ்திரம் ஆபரணமாம்; அன்னிய ஆபரணங்களினால் என்னபயன்?

3. நட்சத்திரங்களுக்குச் சந்திரன் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பதி ஆபரணமாம்; பூமிக்கு அரசன் ஆபரணமாம்; வித்தை யாவருக்கும் ஆபரணமாம்.

4. குதிரைக்கு வேகம் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பயம் ஆபரணமாம்; யதிகளுக்குத்தபசு ஆபரணமாம்; அரசனுக்குப் பொறுமை ஆபரணமாம்; வீரனுக்குப் பராக்கிரமம் ஆபரணமாம்.

5. ஆகாசத்திற்கு பரிசுத்தத்தன்மை ஆபரணமாம்; தாமரைவனத்திற்கு வண்டு ஆபரணமாம்; வாக்கிற்குச் சத்தியம் ஆபரணமாம்; செல்வத்திற்குக் கொடை ஆபரணமாம்; மனத்திற்கு மைத்ரி ஆபரணமாம்; சத்துக்களுக்கு இன்சொல் ஆபரணமாம்; யாவருக்கும் வினயம்ஆபரணமாம்.

---

## குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது கவனிக்கவேண்டியவை.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும் சமயத்தில் தமக்கு எவ்வித மனக்கவலையும் வியசனமும் பயமுமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், தம் மனதில் உதிக்கும் கவலை வியசனம் பயம் முதலியவைகளால் தம்முடைய பாலுக்கும் தோஷம் ஏற்பட்டு, அப்பாலையுண்ணும் குழந்தைகளுக்கு அஜீர்ணம் பேதி மாந்தம் ஜ்வரம் முதலிய வியாதிகள் ஏற்படுகின்றன.

---